விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 09 திங்கட்கிழமை (25.11.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 341

அம்பாள் ரவல்ஸ்
கிலோமீற்றருக்கு 18ரூபா
பலாலி விமான நிலையத்திற்கு 1200/-
அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விசேடசலுகைக் கட்டணம்.
A/C, Non A/C வாகனத்துக்கு
அம்பாள ரவல்ஸ்
கம்பஸ்லேன் (மக்கள் வங்கிக்கு அருகில்)
திருநெல்வேலி
T.P. 2222742, 0777- 518319

# "ஒஸ்லோ" மாநாடு இன்று
# புலிகள் பங்குபற்றும் அமர்வில்
# அமெ-பிரிட்டன் பங்குபற்றாது!
## பார்வையாளர் வரிசையில் இந்தியா

(ஒஸ்லோ)

**நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 39 நாடுகளின் தலைவர்களும், இராஜதந்திரிகளும் ஒஸ்லோவில் கூடியுள்ளனர்.**

**இம் மாநாட்டில் விடுதலைப் புலிகளைத் தடை செய்த அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதி நிதிகள் கலந்து கொண்டாலும்வடக்குக கிழக்குப் புனர்வாழ்வு தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஆராயப்படும் கலந்துரையாடல்களில் இவர்கள் பங்கு பற்றப் போவதில்லை என அறிவித்துள்ளனர்.**

இன்று காலை 10 மணிக்கு ஒஸ்லோவில் ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், நோர்வே பிரதமர் செல்பேர்க்பிக்கும் தொடக்கவுரைகளை நிகழ்த்தி மாநாட்டை ஆரம்பித்து வைப்பார்கள்.

இவர்கள் இருவரின் ஆரம்ப உரைகளை அடுத்துஅமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்கோர்ட் ஆம்டேஜ் முக்கிய உரைஒன்றினையும் ஆற்றவுள்ளார்.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வருகை தந்துள்ள அமெரிக்க, பிரிட்டன் நாட்டுப் பிரதிநிதிகள்-விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் வடக்குக் கிழக்குப் பிரச்சினைகள் கலந்துரையாடப்படும் போது. அக்கலந்துரையாடலில் கலந்து கொளள மாட்டோம் என நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸனிடம் நேற்று நேரடியாகத் தெரிவித்துவிட்டதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கான பொதுவான உதவி வழங்கும் கலந்துரையடல்களில் அமெரிக்காவும் பிரிட்டனும் கலந்து கொள்ளும் எனவும்

(10ம் பக்கம் பார்க்க)



ஒஸ்லோவில் நேற்று பிரதமர் ரணிலும் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## பிரதமர் ரணில் - பாலசிங்கம் நேற்று சந்தித்துப் பேசினர்

(ஒஸ்லோ)

தாய்லாந்தில் நடைபெற்ற முதற்கட்ட 2ம்சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் செயல் வடிவம் குறித்து. அரசபிரதிநிதிகளும், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் நேற்று ஒஸ்லோவில் சநதித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இடம் பெறாது போனாலும் நேற்று இரவு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன பாலசிங்கத்தை தனியாகச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பின் போது நோர்வேயில் நடைபெறவுள்ள அடுத்தசுற்றுச் சமாதானப்பேச்சுக்களில் இடம் பெறக் கூடிய முக்கிய அம்சங்கள் குறித்து ஆராய

(10ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் இன்று ஆரம்பம்
## யாழ்.குடா எங்கும் எழுச்சிக் கோலம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாள் இன்று எழுசசியுடன் ஆரம்பமாகின்றது.

இன்று முதல் நாளை மறுதினம் 27ம் திகதி வரை தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் மண் மீட்புக்காகப் போராடி தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை நெஞ்சில் இருததும் மாவீரர் நாளை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கும் ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளது.

தமிழர் தாயகப் பிரதேசங்களான வன்னி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை, ஆகிய பிரதேசங்களில் எழுச்சி பெற்றுள்ள மாவீரர் நாள் நிகழ்வுகள், யாழ்குடாநாட்டிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மாவீரர் நாளையொட்டி யாழ்.குடா நாடெங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.வலிகாமம், வடமராட்சி, தெனமராட்சி மற்றும் தீவகம் ஆகிய

(10ம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் ஏற்பாடு பூர்த்தி

(திருநெல்வேலி)

மாவீரர்தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் மாவீரரின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர்கள், விளையாட்டுக்கழகங்கள, சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள் ரீதியாகக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாளை மறுதினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்லவுள்ள பெற்றோர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையிலும், வடமராட்சி உடுப்பிட்டி எல்லாங்குளம் மாவீரர் துயிலும

(2ம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் கொடிகள் அறுக்கப்பட்டன

(யாழ்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு முகமாலைப் பகுதியில் கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகள் மற்றும் பதாதைகள் என்பவறறை இராணுவத்தினர் அறுத்து சேதப்படுத்தியுள்ளதாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர் (இ)

## புலிகள் மீதான தடையை அமெரிக்கா உடன் நீக்காது

### பிரதி அமைச்சர் ஆம்டேஜ் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடை உடனடியாக நீக்கப்பட மாட்டாது என்று அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆம்டேஜ் ஒஸ்லோவில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஒஸ்லோ வந்துள்ள அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆம்டேஜ் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இன்று நடை பெறவுள்ள இலங்கைக்கு

(10ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் மகேஸ்வரன் நேற்று நெடுந்தீவுக்கு திடீர் விஜயம்



### நிலைமைகள் குறித்து நேரில் ஆராய்வு

(நெடுந்தீவிலிருந்து ஐங்கரன்)

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்றுப் பிற்பகல் நெடுந்தீவுக்கு விஜயம் செய்து, அங்குள்ள மக்களின நிலைமை குறித்து நேரடியாக ஆராய்ந்துள்ளார்.

காரைநகர் கடற்படைத் தளம் ஊடாக, கடற்படையினரின் அதிவேகப் படகில் அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் செய்தியாளர்கள் அடங்கிய குழுவினர் நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு நெடுந்தீவைச் சென்றடைந்தனர்.

ஈ.பி.டி.பியினருக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபடும் இடத்தற்கு அமைச்சர் மகேஸ்வரன் சென்று, அங்கு போராட்டத்தில் ஈடுபடுபவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் குறித்தும், ஈ.பி.டி.பியினருக்கு எதிரான போராட்டம் குறித்தும் நெடுந்தீவு உதவி அரசாங்க

(10ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக்குச் செல்ல முற்பட்ட மாணவர்கள் நேற்றும் தடுக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி, நெடுந்தீவில் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை நெடுந்தீவுக்குக் கொண்டு செல்வதற்கு. நேற்றைய தினமும் எடுக்கப்பட்ட முயற்சிகள் கலகமடக்கும் பொலிஸாரால் தடுக்கப்பட்டதாக யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கபட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நெடுந்தீவுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் சென்ற யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் குறிகட்டுவானில் வைத்து 300க்கும் மேற்பட்ட கலகமடக்கும் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையில் பிராந்திய அரசமைந்தால்

# வடதிசை முழுமையும் தனித்தமிழ் நாடாகும்

## அமரபுரம் விகாராதிபதி அபாயக் குரல்

(கொழும்பு)

இலங்கையில் பிராந்திய அரசு அமையப் பெற்றால் வடதிசை முழுதும் தனியான தமிழ் அரசாகும் இதன் பின்னர் அண்டை நாடான இந்தியத் தமிழர்களின் உதவியுடன் இலங்கையையே ஆக்கிரமிப்பு செய்ய முடியும்.

இந் நாட்டின் வரலாற்றை நன்கு கூர்ந்து அவதானித்த பின்னரே நான் இவ்வாறு தெரிவிக்கிறேன் வரலாற்றை பார்க்குமிடத்து இத்தகைய ஆக்கிரமிப்புக்கள் அநேகம் இடம்பெற்றுள்ளமை தெரிய வரும்.

அகில பௌத்த சம்மேளத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற தர்மதத்துவ மாநாடொன்றில் உரையாற்றும் போது அமரபுரம் விகாராதிபதி மகாநாயக்க வண. மடிக்கே பஞ்சசீகதேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

இச்சிறிய குட்டி நாட்டிற்கு பிராந்திய அரச முறைமை அவசியமில்லை இப்போதிருக்கும் அரசபரிபாலன முறையே போதுமானதாகும்.

இந்த தேசிய அழிவை தடுப்பதற்குரிய ஒரே வழி அதிகாரப் பகிர்வு சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சமயம் இதற்கு ஆதரவாக வாக்களிக்காமல் எதிர்த்து வாக்களிப்பதேயாகும்.

பாதுகாக்க வேண்டியது எது? சிங்கள மக்களுக்கென இருக்கும் இந்த ஒரு நாட்டையா? அல்லது சிறிதுகாலம் மட்டும் இருக்கும் மந்திரிப் பதவி, எம்.பிப் பதவிளையா? இலங்கை யாருக்கும் தனிப்பட்ட சொத்து அல்ல என்பதை அரசியல்வாதிகள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையைப் பிரித்து அப்பகுதிகளுக்கு நிர்வாக அதிகாரம் வழங்கப்பட்டால் ஐக்கிய இலங்கை அமைவது எவ்வாறு? இதுவே பலரு தொடுக்கும் கேள்வி. இதனால் ஏற்படப்போவது

(9-ம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை உருவாக்க அனைவரும்

# நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்

## யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வேண்டுகோள்

(தென்மராட்சி)

நாட்டில் ஏற்படுத்தப்படுகின்ற சமாதானம் மக்களுக்காகவேயொழிய பாதுகாப்புப் படையினருக்கோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கோ அல்ல. எனவே சமாதானத்தைக் கட்டியெழுப்புகின்ற முயற்சியில் அனைவரும் நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் ஈடுபட வேண்டிய அவசியம் உள்ளது.

இவ்வாறு யாழ் கத்தோலிக்க ஆயர் மேதகு. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகள் நேற்றையதினம் பண்டத்தரிப்பிலுள்ள தியாக இல்லத்தில் முரண்பாட்டுக் கற்கைநெறிகளுக்கான பேர்கொவ் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட 'அதிஉயர் பாதுகாப்பு வலயங்களும் சமாதான நடைமுறைகளும்' எனும் தலைப்பிலான ஆய்வுப் பட்டறையில் குறிப்பிட்டார்.

பேர்கொவ் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி மரியோ ஹொமெஸ்ஸின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இவ் ஆய்வுப்பட்டறையில், இராணுவ கடற்படை, விமானப்படை, உயர் அதிகாரிகள், விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மன்னார் ஆயர் மேதகு. ஆர். இராயப்பு, யு. என். டி. பியைச் சேர்ந்த ரிம்கோளர், வணபிதா ஏ. ஜே. பேர்னாட், தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி பத்மினியம்மா, வேலணைப் பிரதேச செயலர் எஸ். இரத்தினம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன், கூட்டுறவுச் சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம், விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி உட்படப் பலர் பங்குபற்றியிருந்தனர்.

யாழ் ஆயர்தோமஸ்சௌந்தரநாயகம் அங்குதொடர்ந்து குறிப்பிடுகையில்:

கடந்த 20 வருடங்களாக இங்குதொடர்ச்சியானயுத்தம் இடம்பெற்றது. ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஒன்பது மாதங்கள் மட்டுமேயாகும். இவ்ஒன்பது மாத காலத்தில் முழுமையான மாற்றத்தினை ஏற்படுத்துவது என்பது கஷ்டமாகும். இருந்த போதிலும் கூட, மக்களின் நன்மை கருதி நாம் துரிதமாகச் செயற்பட வேண்டும்.

குடாநாட்டில் 35 சதவீதமான நிலப்பரப்பு அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இருக்கின்றது. இது பெரிய அளவாகும். இந்நிலையில் இடப்பெயர்ந்த நிலையில் இருக்கின்ற சுமார் 30ஆயிரம் குடும்பங்களின் வாழ்வியல் நிலைபற்றி ஆழமாகச்சிந்திக்க வேண்டும்.

இக்குடும்பங்கள் இன்னமும் மரநிழல்களிலும், சேலைகளின் மறைப்புகளுக்குப் பின்னால் வாழ வேண்டும் என நாம் விரும்புகின்றோம்

குடாநாட்டில் பலஇடங்களிலும் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் அமுக்கவெடிகளை அகற்றுவதில் கூடிய ளவுகவனம் செலுத்தவேண்டும். நாகர்கோவில் வீதியின்னமும் திறக்கப்படாமல் இருப்பதால் மக்கள் பெருங் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாம் எம்மத்தியில் நம்பிக்கையை கட்டிவார்க்கவேண்டும் கடந்த காலங்களில் நாம் தொலைவில் இருந்துள்ளோம் எமக்குள் அருகாமையை ஏற்படுத்திக் கொள்ள எமது செயற்பாடுகள் உதவவேண்டும் எனக்கூறினார்.

மன்னார் மாவட்ட ஆயர் மேதகு ஆர். இராயப்பு அங்கு பேசுகையில்;

அரசாங்கமும் தமிழீழவிடுதலைப்புலிகளும் தற்போது மேற்கொண்டுவரும் சமாதான நடைமுறைகள் தொடர்பான விடயங்களில் மக்களின் பங்குபற்றுவதற்கு இடமளிக்கப்படவில்லை இதுவிடயத்தில் இருபகுதியினரும் கவனம்செலுத்தி மக்களின் பங்கு பற்றுதலுக்கு வழிவகைசெய்ய வேண்டும்.

சமாதானத்தின் அடிப்படை அம்சம் இயல்பு வாழ்க்கையாகும் எனவே நாட்டில் இயல்பு வாழ்க்கையைஏற்படுத்தி மக்கள் சுதந்திரமாகத் தமது அன்றாட அலுவல்களை மேற்கொள்ளச் செய்யவேண்டும் இதற்கு மனமாற்றம் மிகவும்அவசியமானதாகும்.

தென்பகுதியில் இருக்கின்ற அரசியல் தலைவர்கள் எதையும் எப்போதும் எதிர்மறையாகவே பார்த்து வருகின்றனர். இதனால் பிரச்சினைகள் மேலும் மோசமடைகின்றன பிரச்சினைகளுக்கு தீர்வுமுத்தம் அல்லஎனவும் குறிப்பிட்டார்.

(இ-77)


## வலிகாமம் கிழக்கு பிரதேசபை, நீர்வேலி வாகன மிருகவரித் தகடுகள் - 2003 செய்து வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

2003ம் ஆண்டுக்குரிய வாகன, மிருகவரித் தகடுகள், இதன்கீழ் சொல்லப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக செய்துவழங்குவதற்கானகூறுவிலைகள் 2002-12-09 ம்திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை, என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலைகள் தலைவர், வலி கிழக்கு பிரதேசசபை நீர்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொளகிறேன்

### நிபந்தனைகள்

1. துவிச்சக்கரவண்டித்தகடு 3'' நீளம் 1½'' அகலம் கொண்டதாக அமைதல்வேண்டும். 2003 வ. கி. பி. ச. து. வ என்ற எழுத்துகள், தொடர் இலக்கம் என்பன தகட்டில் மிகத் தெளிவாக பதிக்கப்படல் வேண்டும்.
2. மாட்டு வண்டித்தகடு 4'' நீளம் 3'' அகலம் கொண்டதாக அமைதல்வேண்டும். 2003வ. கி. பி. ச. மா. வ என்ற எழுத்துக்கள் தொடர் இலக்கம் என்பனதகட்டில் மிகத்தெளிவாகப் பதிக்கப்படல் வேண்டும்.
3. வளர்ப்பு நாய்த்தகடு 05செ.மீ விட்டம் கொண்டதாக அமைதல் வேண்டும். 2003 வ. கி. பி. ச. வா. நா என்ற எழுத்துக்கள் தொடரிலக்கம் என்பனதகட்டில் மிகத் தெளிவாகப் பதிக்கப்படல் வேண்டும்.
4. துவிச்சக்கர வண்டி, மாட்டுவண்டி தகடுகள் இடதுபக்க மேல்மூலையிலும் வளர்ப்பு நாய்தகடுகள் மேல்மையத்திலும் துவாரம்இடப்படல் வேண்டும்.
5. ஒவ்வொரு தகட்டின் மேற்புறமும் மஞ்சள் வர்ணத்தால் பூசப்படல்வேண்டும்.
6. துவிச்சக்கரவண்டித் தகடுகள் 3000, மாட்டுவண்டித்தகடுகள் 250, வளர்ப்புநாய் தகடுகள் 1000உம் குறித்த காலப்பகுதியில் செய்துவழங்கப்பட வேண்டும்.
7. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ.குணசிங்கம், ஜே பி. யு.எம்
தவிசாளர்

வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.
22-11-2002

(கி-5295)


### மாவீரர்களின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்திற்கும் செல்லவுள்ள மாவீரரின் பெற்றோர் உடுப்பிட்டி அ. த. க. பாடசாலையிலும், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தைச் சேர்ந்த மாவீரரின் பெற்றோர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும். தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் மாவீரரின் பெற்றோர் சாட்டிமாதா தேவாலயத்திலும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்வோருக்கான வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் அவ்வப் பிரதேசங்களின் முக்கியஇடங்களில் இருந்து மேற்கொள்ளப்படும் ஏனையமாவட்டங்களில் உள்ள துயிலும் இல்லங்களுக்குச் செல்லும் பெற்றோர் மற்றும் உரித்துடையோருக்காக வாகனங்கள ஒவ்வொரு கோட்ட அரசியல்துறை செயலகங்களுக்கு முன்பாகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் வைமன் வீதியிலுள்ள கோட்டச் செயலகத்திலும், வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் சீரணி வீதி சண்டிலிப்பாயிலுள்ள செயலகத்திலும், வலிகாமம் கிழக்கு பிரதேசத்திற்கு நீர்வேலியிலுள்ள செயலகத்திலும், வடமராட்சி பிரதேசத்திற்கு நெல்லியடி மத்தியகல்லூரி வீதியிலுள்ள செயலகத்திலும் தென்மராட்சி பிரதேசத்திற்கு சங்கத்தானையில் உள்ள செயலகத்திலும், தீவுப்பகுதியில் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் வீதியில் உள்ள செயலகத்திலிருந்தும் பயணத்தை மேற்கொள்ள முடியும். வன்னி மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணத் துயிலும் இல்லங்களுக்கு வரும் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர் தங்கும் இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வருவோர் கோப்பாய்ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும் வடமராட்சி எல்லாங்குளம மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வருவோர் உடுப்பிட்டி அ. த. க. பாடசாலையிலும் கொடிகாமம் மாவீரர்துயிலும் இல்லத்திற்கு வருவோர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் தங்க வைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை மாலைநிகழ்வுகளுக்கு வரும் பெற்றோர் பாண்ட்வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் அதனைத்தொடர்ந்து தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தினஉரைஇடம்பெறும் அதனைத் தொடர்ந்து 6 05 மணிக்கு சகல மாவீரர்துயிலும் இல்லங்களிலும் வழிபாட்டுத்தலங்களிலும் ஒரு நிமிடநேரம் மணி ஒலிக்கவிடப்படும் இதன் போது உயிர்காப்புப் பணியில் ஈடுபடும் வாகனங்களைத்தவிர ஏனைய அனைத்து வாகனங்களும் நிகழ்வுதொடங்குவதற்கு ஏற்ப நிறுத்தப்பட்டுஅமைதி பேணப்பட வேண்டும்.

அதனைத்தொடர்து 6.06 மணிக்கு ஒருநிமிடநேரம் அகவணக்கம் செலுத்தப்படும் இவ்வேளை அனைத்து மக்களும்எழுந்துநின்று மாவீரர்களை நினைவில்நிறுத்தி அகவணக்கம் செலுத்த வேண்டும். அதனைத்தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்படும் இதேவேளை 1995 ஆண்டிற்குப் பின்வீரச் சாவடைந்த மாவீரர்களின் கல்லறைஇல்லாத மாவீரர்களின் பெற்றோருக்கு பிறிதொரு இடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(ந-6,7,5,43,)

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 7 வது மாநாட்டில் தம்பையா பங்கேற்பு

(கொழும்பு)

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாக்ஸ்ஸிட் லெனினிஸ்ட்(விடுதலை) நடாத்தும் 7வது தேசிய மாநாட்டில்கலந்து கொள்வதற்காக புதியஜனநாயககட்சியின் தேசியஅமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா இந்தியா சென்றுள்ளார். இன்று முதல் 30ம் திகதி வரைபீஹார் மாநிலத்தின் தலைநகரமான பாட்னாவில்மேற் படிமாநாடு நடை பெறவுள்ளது.

இலங்கையின் இன்றையஅரசியல் நிலைமைகள் தேசிய இனப்பிரச்சினை, சமாதான சூழல்பற்றிய புதிய ஜனநாயக கட்சியின் நிலைப்பாடு மற்றும் சர்வதேச நிலைவரங்கள் பற்றிய கணிப்பையும் மேற்படி மாநாட்டில் தம்பையா முன் வைப்பார்.

இம் மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் மாக்ஸிச-லெனினிஸ்க் கட்சிகள் கலந்து கொள்ள இருக்கின்றன.

அக் கட்சிகளுடன் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கம் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள பற்றிய கலந்துரையாடல்களிலும் இவர் பங்குபற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சுவாசத் தொற்று நோய் மரணம் அதிகரிப்பு

(சுதுமலை)

இலங்கையில் அநேகமான குழந்தைகள் சுவாசத்தொற்று நோய் காரணமாகவே இறக்கின்றன என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்முக நாடுகளின் குழந்தைகளின் இறப்பு வீத அதிகரிப்புக்கு முதலாவது காரணமாக அமைவது தீவிர சுவாசத் தொற்றுநோய்கள், அடுத்த தாக போஷாக்கின்மை, வயிற்றோட்டம் என்பன அமைகின்றன.

இதிலே வயிற்றோட்டத்தையும், போஷாக்கின்மையையும் கட்டுப்படுத்துவதற்கு பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால், தீவிர சுவாசத் தொற்றுக்கள் தொடர்பான அறிவு பெற்றோரிடம் குறைவாகவே இருந்து வருகின்றது.

அண்மையில் பெறப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இலங்கையில் 5 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 20லட்சம் ஆகும்.

ஒவ்வொரு வருடமும்சுமார் 20ஆயிரம் குழந்தைகள் வரையில் இறக்கின்றனர். இறக்கும் குழந்தைகளில் ஏறத்தாழ 7 ஆயிரம் குழந்தைகள் தீவிர சுவாசத் தொற்றுக்களால் இறக்கின்றன எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ- 252)

## வலம்புரியின்

ஆதரவுடன் நடத்தும்

மூத்த பத்திரிகையாளர்

## அமரர் சி. செல்லத்துரை

(வீரகேசரி)

அவர்களின் ஞாபகார்த்த

## சிறுகதைப் போட்டி

பரிசில்கள

முதலாம் பரிசு: ரூபா 2000 உம் விருதும்
இரண்டாம் பரிசு: ரூபா 1000 உம் விருதும்
மூன்றாம் பரிசு: ரூபா 500 உம் விருதும் வழங்கப்படும்

தரமான சிறு கதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

# வடகிழக்கு மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது

### மாகாணக் கல்விப் பணிப்பாளர் இஸ்ஸதீன்

(கிளிநொச்சி நிருபர்)

வடகிழக்கில், யுத்தம் காரணமாக மாணவரின் கல்வி பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக கிளிநொச்சி நகரில்நடைபெற்ற வடகிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி செயல் திட்டம் தயாரித்தல் தொடர்பான செயலமர்விற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் மாகாண கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஐ. எம். இஸ்ஸதீன் குறிப்பிட்டுள்ளார்.

இச்செயலமர்வில் வடகிழக்கில் உள்ள 24 கல்வி வலயங்களின் பணிப்பாளர்களும் மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி இராஜநாயகம் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி கமலா பெரியதம்பி, தமிழீழ கல்விக்கழகப்பொறுப்பாளர் வே. இளங்குமரன் மற்றும் அருள்மாஸ்ரர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாகாண கல்விப் பணிப்பாளர் ஜனாப். இஸ்ஸதீன் மேலும் பேசுகையில்;

வடகிழக்கில் 5 ஆயிரத்து இரண்டு தமிழ் ஆசிரியர்களுக்கும் 377 சிங்கள ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

இந்தியாவில் உள்ளதுபோல் திறந்த பாடசாலை கல்வித் திட்டம் வடகிழக்கில் அமுல் படுத்தப்பட வேண்டும் தற்போது 6இலட்சத்து 43 ஆயிரத்து 569 மாணவர்கள் வடகிழக்கில் உள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

தமிழீழ கல்விக்கழகஅனுசரணையுடன் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சும் கல்வித்திணைக்களமும்இணைந்து இச் செயலமர்வை இரு இரு தினங்களாக கிளிநொச்சியில் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (உ)

## நிதியுதவி திரட்டுவது முக்கிய நோக்கமல்ல

### உலக வங்கி இயக்குநர்

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெறும் மாநாட்டை விட, ஜப்பானில் அடுத்து ஆண்டு ஜனவரியில் இடம்பெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் மாநாட்டிலேயே இலங்கைக்கு நிதியுதவி வழங்குவவது குறித்து கவனம் செலுத்தப்படும் என உலக வங்கியின் இலங்கைக்கான இயக்குநர் பீட்டர் ஹரோல் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நிதியுதவி மிக முக்கியமானதாயினும், ஒஸ்லோ மாநாடு சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு திரட்டுவதையேதேயே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## நெடுந்தீவு பிரதேச சபை ஊழியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பிரதேசசபையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் அனைவரையும் இன்று காலை பிரதேச சபை அலுவலகத்திற்கு வருகை தருமாறு, பிரதேச சபைத் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

## தாதியர் வேலைநிறுத்த போராட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசாங்கசேவை தாதிமார் தொழிற்சங்கத்தால் நாடளாவியரீதியில் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

தாதிமார் சம்பளம்தொடர்பான அமைச்சர்மட்ட உப குழுவின் அறிக்கைகுறித்து, அமைச்சர்களான கருஜெயசூரியா, பி. தயாரட்ன ஆகியோருடன்தாதிமார்தொழிற் சங்கம் பேச்சுவார்த்தை நடத்தியதைஅடுத்தே இப்போராட்டம் கைவிடப்பட்டது.

இச்சந்திப்பில் சம்பள முரண்பாடுதொடர்பாக 72 மணித்தியாலங்களுக்குள் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அமைச்சர்கள் இருவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலஅவகாசத்திலுள் அறிக்கை சமர்ப்பிக்கப்படாவிட்டால் மீண்டும் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப் படும்என தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வேலைநிறுத்தப்போராட்டத்தில் யாழ். போதனாவைத்திய தாதிகள் இணைந்துகொள்ளவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சமாதான விளையாட்டில் யாழ்.அணிஇரண்டாம் இடம்

(யாழ்ப்பாணம்)

வடக்குத் தெற்குச் சமாதான விளையாட்டு விழாவில் யாழ்ப்பாண அணி 67 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

கடந்த 16ஆம்திகதி களுத்துறையில் ஆரம்பமான இவ் விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாண அணி 6 தங்கப் பதக்கங்களையும் 9 வெள்ளிப் பதக்கங்களையும் 4வெண்கலப்பதக்கங்களையும் பெற்று [illegible]லாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை வவுனியா மற்றும் களுத்துறை ஆகியமாவட்டங்களிலிருந்து 1700ற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் பங்கு பற்றியிருந்தனர். (ந-5.16)

## மாவட்டச் செயலர்

**மூன்றாம் பரிசு:** ரூபா 500 உம் விருதும் வழங்கப்படும்

தரமான சிறு கதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## போட்டி விதிகள்

- கதைகள் நாட்டின் சமகாலச் சூழலைக் கருப் பொருளாகக் கொண்டு எழுதப்பட வேண்டும்.
- 500 - 600 சொற்களுக்குள் வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் எழுதப்படவேண்டும்.
- கதைகள் வேறு எந்த ஊடகங்களிலும் வெளி வராததாகவும், மொழி பெயர்ப்போ, தழுவ தலோ அற்றதாகவும் இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியில் வாழ்பவரும் வயது, பால் வேறுபாடின்றி பங்குபற்றலாம்.
- ஒருவர் ஆகக்கூடியது இரு ஆக்கங்களை போட் டிக்கு அனுப்ப முடியும்.
- போட்டியில் கலந்துகொள்ளுபவர், தனது சொந் தக் கதை என்பதை உறுதிப்படுத்துவதுடன், முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற் றைப் பிறிதொரு தாளில் எழுதிக் கதையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- சிறுகதைகள் யாவும் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி வலம்புரி, 15 வெள்ளாந்தெரு யாழ்ப் பாணம் என்னும் முகவரிக்கு 10-12-2002 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
- வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வலம்புரி யின் 3-ம் ஆண்டு நிறைவு விழாவில் இடம் பெறும்.

குறிப்பு:- நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்படும் சிறுகதைகள் வலம்புரியின் வாரமலர் சங்கு நாதத்தில் பிரசுரிக்கப்படும்.

- ஆசிரியர்

விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாண அணி 6 தங்கப் பதககங்களையும் 9 வெள் ளிப் பதக்கங்களையும் 4 வெண் கலப்பதக்கங்களையும் பெற் றுக் கொண்டது இப்போட்டி களில் 199 புள்ளிகளைப் பெற்று களுத்துறை அணிமுத

## சிற்றூர்திச் சேவையை விஸ்தரிக்குக

(கல்வயல்)

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில்இருந்து அரி யாலை தபாற்கட்டைச் சந்தி வரை நடைபெறும் தனியார் சிற்றூர்திச்சேவையை நாவற் குழி தச்சன்தோப்புச்சந்தி வரை நீடிக்குமாறு சம்பந்தப் பட்டபகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-111)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட் டம் நாளை செவ்வாய்க் கிழமை மு.ப.10-00மணிக்கு மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிர தேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-75)

## மாவட்டச் செயலர் நியமன நடைமுறை மாற்றம்

(கொழும்பு)

மாவட்டச் செயலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நியமிப் பதற்கு மான நடைமுறைகள் மாற்றியமைக்கப்படவுள்ளன.

உள்துறை மாகாண சபை கள் உள்ளூராட்சி அமைச்சுக் கான நிதி ஒதுக்கீட்டுக் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் அலுக் அலுவிஹார மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந் தும் கூறுகையில்; நிர்வாக சேவைகளில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகளிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் நேர்முகப் பரீட்சை சபை ஒன்றே தெரிவுகளை மேற்கொள்ளும் என்றார். (உ-8)

## இலங்கை வங்கி மேற்றரக் கிளையின்சேவை 365 நாட்களும் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் மேற்ற ரக் கிளை தனது சேவையை 365 நாட்களும் மக்களுக்கு வழங்குவதற்கான தயார்ப் படுத்தல்களில் ஈடுபட்டு வரு கின்றது.

மேற்படி வங்கிச் செயற் பாடுகள் தற்போது வாரத் தில் 6 தினங்கள் இடம்பெறு வது தெரிந்ததே.

இனிவரும் காலங்களில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் வங்கியைத் திறந்து வாடிக் கையாளர் வைப்பு எடுப்புச் செய்ய வழிவகை செய்யப்பட வுள்ளது.

அத்துடன், வாரம் முழுவ தும் அடகுச் சேவையும் இடம் பெறவிருப்பதாக முகாமை யாளர் எஸ். விக்னராஜா தெரிவித்தார். (உ-7)

# அமெ. டொலர் பாவனையை நிறுத்த வ. கொரியா முடிவு

## எண்ணெய்த்தடைக்குப் பதிலடி

(பியோங்யாங்)

அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக கும் விதத்தில் அமெரிக்க டொலரின பாவனையை முற்றாக நிறுத்தும் படி வடகொரியா மக்களைக் கேட்டுள்ளது.

வடகொரியா அணு ஆயுதங் கள் வைத்திருப்பதாக கடந்த வாரம் ஒப்புக் கொண்டது. இதனை யடுத்து அமெரிக்கா, வடகொரி யாவுக்கு இதுவரை காலமும் வழங்கி வந்த அணு உலை எண்ணெய் விநியோகத்தை அடுத்த மாதம் முதல் தடுத்து நிறுத்தி விடப் போவதாக அறிவித்திருந்தது. இதனால் அமெரிக்கா மீது ஆத்திரம் அடைந்த வடகொரியா தனது நாட்டு மக்கள் அனைவரையும் அமெரிக்க டொலரின் பாவனையை அடுத்த மாதம் முதல் முற்றாக நிறுத்த வேண்டும் என அறிவித் துள்ளது. இந்த நடவடிக்கை அமெரிக்காவிற்கு ஒரு தகுந்த பதிலடியாக இருக்கும் . என தெரிவித்த வடகொரிய அரசு தனது நாட்டு மக்களும் இங்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பய ணிகளும் தம்மிடமுள்ள அனைத்து அமெரிக்க டொலர்களையும் யூரோ நாணயங்களாக மாற்றி விடும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

(பி-2)



# மாவீரர் புகழ் பாடுவோம்

## இரத்தக் கனிகள்

யுத்த களத்தில்
மடிந்த -
இரத்தக் கனிகள்
நித்தம் விழுந்த
குண்டுகளை
நிறுத்திய
முத்துப் பந்தல்கள்

கொட்டும் பனியிலும்
கொதிக்கும்
வெயிலிலும்
சற்றும் கலங்காது
அரண்கள்
காத்தவர்கள்
நிலத்திலும் கடலிலும்
பலத்தினைக் காட்டி
நிலவுகள்
ஆன
நெருப்பு மலர்கள்

சிரிப்பிலும்கவிதையிலும்
தமிழுடன் கலந்த
அர்த்தமுள்ள
புலிகளின் மாவீரர்கள்

- நெல்லை மகேஸ்வரி-
நெல்லியடி

# புதுரகக் கலண்டரால் இத்தாலியில் பரபரப்பு

(ரோம்)

இத்தாலியில் புகைப்படக் கலைஞர் ஒருவரால் உருவாக் கப்பட்டுள்ள 2003ஆம் ஆண்டுக் கான நாள்காட்டி (கலண்டர்) பெரும்பரபரப்பையும், எதிர்ப்பை யும் கிளப்பியிருக்கின்றது.

கிறிஸ்மஸ் அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளை யில்எதிர்வரும் 12மாதங்களுக் குமான தினசரி நாள்காட்டியில் அன்னை மேரியின் படம் வெவ்வேறு விதமாகக் காட்டப் பட்டுள்ளது.

தொலைக்காட்சிகளில் விளம் பர மாடல்களாகத் தோற்றும் இளம்பெண்களை வெவ்வேறு விதமான கோணங்களில் அரை குறை ஆடைகளுடன படம பிடித்து அன்னை மேரியாகக் கலண்டரில் காட்டப்பட்டுள்ளது

வருடம் தோறும்இவ்வாறான கலண்டர்கள் இத்தாலிய மக் களைக் கலக்குவது வழமை தான். ஆனால் இம்முறை அளவுக்கு மீறிவிட்டதுஎன்று எதிர்ப்பாளர் கள் கூறுகிறார்கள். (பி)

## வெற்றியை எமக்கென நாட்டினீர்

கல்லறைகள் சொல்லும் உங்களின்
காவிய தியாகங்களின் சாதனை
சொல்லிலும் செயலிலும் உயிர்மூச்சிலும்
சொந்தமான தமிழீழத்தின் பற்றினை!

மாவீரராய் வீழ்ந்தவர் நீங்களே
மான மறவராய் எழுகிறீர் நெஞ்சிலே
ஏவிய கொடும்பகை சரித்திட
எழுந்த உம் உணர்வினை மதிக்கிறோம்!

ஈழத்தின் விடுதலை மூச்சினை ஈரமாய் ஆகினீர்
உம்குருதியால்
நாளங்கள் நாடிகள் எங்குமே
நம்பிக்கை ஊட்டியே சென்றுள்ளீர்

சாதனை பலதினை மண்ணிலே
சாதித்து எழுப்பினீர் மறவரே
வேதனை கோடிகள் சுமந்துமே
வெற்றியை எமக்கென நாட்டினீர்!

தமிழீழத்து காவலர் ஆகியே
தனித்துவத்தினை எமக்கென ஊட்டினீர்
புவியிலே தமிழரின் புகழினை
புரிய வைத்ததும் உங்களின் தியாகமே!

- சூரியநிலா
ஈச்சமோட்டை



கலிபோனியாவில் பசிபிக்கா என்ற தமது தோட்டத்தில் தாவரவியல் விஞ்ஞானி ஜேம்ஸ் ஆம்ஸ்ரோங் தாம் பயிரிட்டுள்ள புதியரக றோசாப்பூச் செடிகளைப் பார்த்து மகிழ்கிறார். வீரியரக இந்த றோசாச் செடி கள் கொமான்ட் பேர்போமன்ஸ் என்று அழைக்கப்படு கின்றன.







## திறப்பு விழா அழைப்பு

காலம்: 25.11.2002
இடம் : கோவிந்தன் கடைச்சந்தி, கிளிநொச்சி
நேரம் : முற்பகல் 11.30

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர், ஏனைய மக்கள் போராளிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

# நாய்க்கடி வழக்கில் இளவரசி குற்றவாளி

(லண்டன்)

இளவரசி ஆனின் வளர்ப்பு நாய் இரண்டு சிறுவர்களைக் கடித்ததையடுத்து நீதிமன்றம் ஒன்று அவருக்கு 500பவுண் அபராதம் விதித்தது. என்றாலும் அவரது நாய் கொல்லப்படுவதி லிருந்து தப்பியது.

தமது நாய் இரு சிறுவர்களைக கடித்த குற்றத்தை இளவரசி ஆன் நீதிமன்றில் ஒத்துக் கொண டார். பயங்கர நாய்கள் சட்டத் தின் கீழ் இளவரசிக்கு எதிராக இந்த வழக்குத்தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

இங்கிலாந்து மகாராணி இரண்டாவது எலிசபெத்தின் மூத்த புதல்வியான இளவரசி ஆன் தமது கணவர் கொமடோர் ரிமோத்தி லோரன்ஸ் மற்றும இரு பிள்ளைகளோடும் நீதிமன்றுக்கு வந்திருந்தார்.

இளவரசியின் ‘டொட்டி’என்ற நாயினால் கடிக்கப்பட்ட இரு சிறுவர்களுக்கும் இழப்பீடாக தலா 250பவுண்கள் வழங்கும்படி யும் தீர்ப்பில் கூறப்பட்டது.

மீண்டும் அந்நாய் யாரையும் கடிக்குமானால் அதைக் கொன்று விடுவதற்கான உத்தரவும் பிறப் பிக்கப்பட்டதுடன், பொது இடங் களில்நாயைக் சங்கிலியில் கட்டி வைத்திருக்கும் படியும் இளவர சிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இளவரசியின் நாய்க்கு ஒத்தி வைத்த மரணதண்டனை விதிக் கப்பட்டதை கடிபட்ட பையன் களின் உறவினர்கள் உடனடியா கவே



கண்டித்தார்கள்

ஈஸ்டர் தினத்தன்று வின்சர் கிறேட் பூங்காவுக்கருகில் இவ் விரு சிறுவர்களும் சைக்கிளில் செல்கையில் விழுந்து கிடந்தார் கள். அவ்வேளை இளவரசியின் ‘டொட்டி’ அவர்கள் மீது பாய்ந்து இருவரையும் கடித்து விட்ட தென்றும் கூறப்பட்டது.

நாய்க்கடி அவ்வளவு பெரி தாக இல்லை. காயங்களுக்குக் கட்டுப் போட்டு தடுப்பூசியும் ஏற்றப் பட்டால் போதும் என்ற இளவரசி யின் வழக்கறிஞர் கூறினார். ஆனால் பையன்களின் பெற்றோரோ பிள்ளைகள் கடிபட்டது மட்டு மல்ல உளரீதியாகவும் பாதிக் கப்பட்டுள்ளார்கள் என்றார்கள்.

‘நீதிவழங்கப்பட்டதாக நாங் கள் நினைக்கவில்லை அந்த நாய் இன்னமும் உயிருடன் இருக் கிறது. வேறுயாரையும்’’ கடிக் கவும் செய்யலாம் என்றார்கள் அவர்கள். (பி)

# பிலிப்பைன்ஸ் பஸ் விபத்தில் 33 பயணிகள் உயிரிழந்தனர்

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணி லாவுக்கு தென்கிழக்கு பகுதி யிலுள்ள ஆற்றுக்குள் ஒரு பஸ் வீழ்ந்ததில் 33பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 6பேர் படுகாய மடைந்துள்ளனர்.

நெடுஞ்சாலை வழியாக மிக வேகமாக வந்த பஸ்லின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட டதனால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் அந்தப் பகுதியிலுள்ள ஆற் றுக்குள் பாய்ந்தபோது அதில் இருந்த பயணிகள் 33பேர் ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்றும் 6பேர் படுகாயமடைந் துள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித் துள்ளன

இதே வேளை இந்த விபத்துக் குறித்து ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பஸ்ஸின் சாரதி உறக்கத்தில பஸ்ஸை செலுத்தியதாலே இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் என முன்னர் சந்தேகம் தெரிவித்திருந் தனர். (பி-2)

# இன்று ஒரு தகவல்

## காந்த ஈர்ப்பு விசை

நிலாவுக்கும் பூமிக்கும் சம்பந்தம் இருக்கிறதென்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீர்கள் ஆனால், நிலாவுக்கும் நமது வயிற்றுக்கும் சம்பந்தம் இருக்கிறதென்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீர்களா? நான் சொன்னால் சந்தேகப்படுவீர்கள் இல்லினாய்ஸ் யூனிவர்சிட்டியில் உள்ள ஒரு ஆராய்ச்சியாளர் இதைச் சொல்கிறார் அவரின் பெயர் புரூஃவ் ரல்ப் மொரிஸ்; அந்தப் பேராசிரியர் 5 வருஷமாக ஒரு ஆராய்ச்சி பண்ணினார். 100 பேருக்குமேல் சோதனையும் பண்ணிப் பார்த்தார்... அப்படிப் பண்ணிப்பார்த்துவிட்டுச் சொல்கிறார் வயிற்றுவலிக்கும் நிலாவுக்கும் சம்பந்தம் இருக்கிறது: அதாவது இன்னமும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் அல்சருக்கும் பௌர்ணமிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்கிறார் அவர்!

அவர் பலரைச் சோதனை பண்ணிப் பார்த்தாரல்லவா? அவர்கள் எல்லோருக்கும் மார்புவலி, அல்சர் பினீடிங் என்பன பௌர்ணமி காலத்தில் அதிகமாக இருந்ததாம். அதுசரி! இரண்டரை இலட்சம் மைல்களுக்கு அப்பால் இருக்கிற அவ்வளவு பெரிய நிலாவுக்கும் இங்கே இருக்கிற இத்தனை சிறிய வயிற்றுக்கும் எப்படிச் சம்பந்தம் இருக்க முடியும் அதற்குக் காரணம் என்னவென்று அவரே சொல்லியிருக்கிறார். அதாவது பூமிக்கும், நிலவுக்கும் இடையே ஏற்படக்கூடிய காந்த ஈர்ப்பு சக்திதான் அதற்குக் காரணமாம்.

மனிதனின் உடம்பையும் மனதையும் இந்த சக்தி பாதிக்கின்றதாம். காந்த சக்தியென்றால் அது இரும்பைத்தானே பர்திக்கும். உடம்பை எப்படிப் பாதிக்கின்றது? மனிதனின் உடம்பிலும் இரும்பு சக்தி இருக்கின்றது... அதனால் அந்த ஈர்ப்பு சக்தி நமது உடம்பைப் பாதிக்கின்றது. இதை நிருபிப்பதற்கு ஒரு சோதனை கூடப் பண்ணிப் பார்த்திருக்கிறார்கள்.

எப்படி யென்றால், முதலில் ஒரு கூண்டு தயார் பண்ணினார். அதில் ஒரு எலியைப் பிடித்து விட்டார்கள், அந்த எலி, சுற்றிச் சுற்றி ஓடியது. காந்த சக்தியை அந்தக் கூண்டுக்குள்ளே உண்டாக்கினார். உடனே எலியிடம் ஒரு மாறுதல், அது யோசிக்கிறது; மயங்கி நிற்கிறது. சுற்றி ஓடுவது குறைகிறது. இதிலேயிருந்து என்ன தெரிகிறது? காந்தம் உண்டாக்கக் கூடிய ஈர்ப்பு சக்தி, அந்த எலியினுடைய உடம்பையும், மனத்தையும் பாதிக்கிறது. இதே மாதிரித்தான் பூமிக்கும் நிலவுக்கும் இடையிலே ஏற்படக் கூடிய காந்த சக்தி மனிதனுடைய உடம்பையும், மனததையும் பாதிக்கிறது.

எங்கள் ஊரில் ஒரு பாட்டி இருந்தார். அவர் அப்பெழுதே, அமாவாசையில் மருந்து சாப்பிடாதே, பௌர்ணமியில் மருந்து சாப்பிடாதே என்று சொல்லுவார். அதை யாரும் கேட்பதில்லை பலர் அமாவாசையன்று வயிற்றுக்கு ஒய்வு கொடுப்பது இப்போதும் வழக்கமாகத்தான் இருக்கிறது. இப்போதுள்ள டாக்டர்கள் கெடுவைப்பது உண்டு. இன்னும் ஒரு 24 மணி நேரம் தாண்டினாற்றான் எதையும் உறுதியாகச் சொல்ல முடியும், அந்த நேரம் தாண்டிவிட்டால் நோயாளி ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார் என்று அர்த்தம் என்பார்கள்.

இதே மாதிரி அந்தப் பாட்டியும் கெடுவைப்பார் 'என்ன பாட்டி! அந்த ஆள் பிழைப்பாரா என்று கேட்டால் 'எதற்கும் இந்த அமாவாசை தாண்டட்டும் அதன் பின்னர் சொல்கிறேன்' என்பார். இப்படிப் பலருக்குக் கெடுவைத்துக் கொண்டிருந்த அந்தப் பாட்டியையே ஒரு அமாவாசை வந்து அழைத்துக் கொண்டுபோய் விட்டது.

பூமிக்கும் நிலவுக்கும் இடையில் ஏற்படக் கூடிய காந்த சக்தி மனிதனுடைய மனதையும் பாதிக்கிறது. இதை மனோதத்துவ டாக்டர்களே ஒத்துக் கொள்கிறார்கள் புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள் அப்படியான நேரத்தில் வழக்கத்தை விடக் கொஞ்சம் அதிகமாக நடந்து கொள்வார்களாம்.

வழக்கமாக என்னை வந்து பார்க்கிற ஒரு சிநேகிதன் ஒரு நாள் வரவில்லை. மறுநாள் அவனைப் பார்த்து. ஏன்டா நேற்று என்னை வந்து பார்க்கவில்லை? என்கிறேன். அவன் 'நேற்றுப் பௌர்ணமி! அதனால், உன்னிடம் வரவேண்டாம் என்று கொஞ்சம் ஒதுங்கி இருந்தேன்' என்றான். □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அனைத்து ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்ற வேண்டும்

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில் இதுவரை கடமையாற்றாத பாடசாலை ஆசிரியர்களை பின்தங்கிய மற்றும் கஷ்டப் பிரதேசங்களிற்கு இடமாற்றுவது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது;

இத் தீர்மானம், அண்மையில் மாகாண முதல் அமைச்சர்களுக்கும் கல்வி அமைச்சர்களுக்கும் இடையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே எடுக்கப்பட்டுள்ளது;

(உ-10)

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு இன்று

(ஊர்காவற்றுறை)

மாவீரர் நாளை ஒட்டி தீவகப் பகுதி மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு, இன்று இடம் பெறவுள்ளது.

இந்த வகையில், ஊர்காவற்றுறைப் பகுதி மாவீரர்களின் பெற்றோர் இன்று மு. ப.10 மணிக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயத்திலும்,

வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் வேலணை வங்களாவடிச் சந்தியில் உள்ள சரஸ்வதி வித்தியாலயத்திலும் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

(உ-75)

### புலிகள் - அமெரிக்கா உறவு

# இன்னமும் நெருக்கமடையவில்லை

## அமெரிக்கத் தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கா பங்கு கொள்வதனைக் கொண்டு அமெரிக்காவுக்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் நல்லுறவுகள் ஏற்பட்டு விட்டதாக அர்த்தம் கூறக் கூடாது என கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதுரகத்தின் செயலார் ஜேர்கபிராக் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அச் செய்திக் குறிப்பில்;

இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதை நோக்காகக் கொண்டே ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கா பங்கு கொள்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அக்கறை கொண்டு இம் மாநாட்டில் பங்கு கொள்ளவில்லை,

இம்மாநாட்டில் அமெரிக்காவின் சார்பில் இராஜாங்கத் திணைக்களத்தின் ஆசிய பிராந்திய உதவிச் செயலாளர் ரிச்சட் ஆர்மிடேஜ் மற்றும் இலங்கைக்கான தூதுவர் ஆஸ்லிவில்ஸ் ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## இராசி பலன்

25-11- 2002

(கார்த்திகை 9, திங்கள்)
பஞ்சமி மு ப 9 25 வரை
பூசம் மு. இ. 11 48 வரை
இராகு காலம்- 7 42- 9 12
நல்ல நேரம்- 12. 12- 1. 42

**மேடம்**

தாய்வழி உறவு, உடல் சோர்வு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம்;

**இடபம்**

நினைத்த காரியம் கைகூடும், வாக்கு மேன்மை, தனவரவு, பிரயாண சுகம்.

**மிதுனம்**

குடும்ப சுகம், தனவிரயம், வேலைக் கஷ்டம், முயற்சி தாமதம்;

**கடகம்**

ஆழ்ந்த சிந்தை, வியாபார நன்மை, போசனசுகம், நல்ல முயற்சி;

**சிங்கம்**

தேவையற்ற கோபம், பிரயாணம், சுபசெலவு, உடல் நலக்குறைவு;

**கன்னி**

நினைத்த காரியம் கைகூடும், எதிர் பாராதபொருள் சேர்க்கை, கௌரவம், உறவினர் வருகை.

**துலாம்**

பிறர் உதவி, அதிகாரம். அதிக பிரயாசை, முயற்சி பலிதம்.

**விருச்சிகம்**

உறவினர் சந்திப்பு, புதிய திட்டமிடல், உஷ்ண வியாதி, கட்டுப்பாடு;

**தனுசு**

காரிய தடங்கல், போசன சுகம், எதிர்பாராத அச்சம், சிறு வியாதி;

**மகரம்**

எதிர்பாராத நன்மை, சுவாரஸ்யம். காரிய அனுகூலம், குடும்ப சுகம்;

**கும்பம்**

தேக ஆரோக்கியம், செய் தொழில் முன்னேற்றம். சத்துரு ஜெயம், காரிய அனுகூலம்.

**மீனம்**

வியாபார நன்மை, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், சிறு வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## வட-கிழக்கு மாகாண சபைக்கு நிவாரணம்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக உள் விவகார, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்; மாகாண சபைகளினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற ஆலோசித்து வருவதாகவும்,

மாகாண சபைகளின் கௌரவத்தை பேணக் கூடிய மாற்றங்களை அறிமுகப்படுத்தப் போவதாகவும், மாகாண சபைகளில் தற்போது உள்ள சட்டக் கட்டளைகளில் திருத்தம் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மோட்டார் விபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏழாலை கிழக்கைச்சேர்ந்த முத்தையா பாலேந்திரன் (வயது 52) அவருடைய மனைவி பாலேந்திரன் பாலவதனி (வயது 45) அவர்களுடைய மகன் பாலேந்திரன் சங்கீதன் (வயது 10) எனும் மூவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற சமயம் விபத்துக்குள்ளாகி காயம் அடைந்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் இவர்கள் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவேளையே விபத்துக்உள்ளாகி யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

(பி-07)

## சுய விருப்பில் ஓய்வு பெற ஏற்ற வழிவகைகள்

(கொழும்பு)

சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற விருப்பம் கொண்டுள்ள அரச ஊழியர்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொருட்டு சட்ட விதிகளை ஏற்படுத்துமாறு பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபயவர்த்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நிதி அமைச்சின் மூலம் சுற்று நிருபம் ஒன்று அமைச்சுக்களினதும் அரசாங்க திணைக்களங்களினதும் கவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக ஆராயும் பொருட்டு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தலைமையில் சிரேஷ்ட அதிகாரிகள் 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-8)

## மரக்கன்று நாட்டல்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மரக்கன்கள் நாட்டும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலும் இம் மாவீரர் நாளை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் நிகழ்வுகளிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இலவச மருத்துவ முகாம் அறுநூறு பேர் பயன்

(ஊர்காவற்றுறை)

கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் 600 இற்கும் அதிகமானவர்கள் பயனடைந்துள்ளனர்.

இம் மருத்துவ முகாமில் 250 பேருக்கு கண் பரிசோதிக்கப்பட்டு இலவச கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன், 200 வறிய சிறுவர்களுக்கு பாடசாலைச் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

வேலணைமேற்கு, சரவணை புளியங்கூடல், சின்னமடு, சுருவில் நாரந்தனைப் பகுதி மக்கள் இதில் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

(உ-75)

## பொது மக்கள் என்ற பெயரில் ஈ. பி. டி. பி புரிந்த அடாவடிகளுக்கு மக்கள் பாடம் புகட்டி வருகின்றனர்

### இன்றைய நிலை குறித்து ஈ. பி. ஆர். எல். எவ் (சுரேஸ் அணி) அறிக்கை

(திருநெல்வேலி)

யாரும் எங்கும் அரசியல் நடத்துவதென்பதும், தமது கருத்துக்களைக் கூறுவதும் அவர்களது அடிப்படை உரிமை ஆனால், ஈ.பி.டி பியினர் மக்கள் மீது நடாத்திய அநாகரிகமான தாக்குதலால் தான் அவர்கள் முதலில் நெடுந்தீவில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் குறிப்பில் மேலும், ஏறத்தாழ கடந்த ஒரு வார காலமாக நெடுந்தீவிலிருந்து ஈ பி டி. பியினரைவெளியேற்றக் கோரி அங்குள்ள மக்கள் போராடிவருகின்றனர்.

ஆனால், அரசியல் செய்வது தமது அடிப்படை உரிமை என்ற பெயரில் ஈ. பி. டி. பியினர் பொலிஸ், கடற்படையினர் பாதுகாப்புடன் தொடர்ந்தும் நெடுந்தீவில் தங்கியுள்ளனர்.

1994 இல் நாம் தீவுப் பகுதிகளுக்கு தேர்தல் பிரசாரத்துக்கு சென்ற பொழுது அங்குள்ள கடைகளில் தேநீர், அருந்தவோ, கோயில் கிணற்றடியில் படுத்துறங்கவோ ஈ.பி.டி.பியினர் அனுமதிக்கவில்லை. பிரசாரத்துக்குச் சென்ற எமது தோழர்கள் பொது மக்கள் என்ற பெயரில் அவர்களால் அடித்து விரட்டப்பட்டனர்.

இதே போல் 2001 ஆம் ஆண்டு தேர்தலின் போது பிரசாரத்துக்குச் சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தோழர்களும், வேட்பாளர்களும் தாக்கப்பட்டனர்; அநியாயமான கொலைகளும் தாக்குதல்களும் அப்போது நடைபெற்றன. அப்பொழுதும் மக்களே அதனைச் செய்ததாக ஈ.பி டி.பியினர் நியாயப்படுத்தினர். அன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பிரசாரத்துக்கு சென்றதை தடுத்து நியாயமென்றால் இன்று உங்களை வெளியேறக் கோரி மக்கள் கூறுவது நியாயமே?

இன்று அடிப்படை உரிமைக்காகவும் அரசியல் கட்சியின் ஜனநாயகத்துக்காகவும் பொலிஸாருடனும், கடற்படையினருடனும் போராடுவதாக காட்டிக் கொள்வது அவர்களின் பம்மாத்து அரசியலையே காட்டுகின்றது. மக்களைத் திரட்டி தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்கள் பொலிஸாரினதும், கடற்படையினரதும் பாதுகாப்புடன் எவ்வாறு ஜனநாயகத்தை ஏற்படுத்தி கொள்ள முடியும்.

முன்னர் செய்த அடாவடித்தன அரசியல் தான் இன்று அவர்களுக்கு எதிராக திரும்பியுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களால் கடந்த தேர்தலில் ஒதுக்கப்பட்ட இக் குழுவுக்கு எதிரான போராட்டம் என்பது எமது நேரத்தை வீணடிப்பதும் அத்தியாவசியம் அற்ற ஓர் அமைப்புக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பதும் ஆகும். எனவே, எமது போராட்டங்களை மக்களின் எதிர் கால சுபீட்சங்களுக்கான போராட்டங்களுக்காகவும் திட்டமிடுவோம். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-43)

## பிராந்திய பொருளாதார ஆணைக்குழு அமைக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் 4 பிராந்திய பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான பிரேரணை அடுத்தமாதம் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மாகாண மட்டத்தில் முதலீட்டு வைப்புக்களுக்கு இடமளிப்பதே பிராந்திய பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான நோக்கம் ஆகும்.

பிராந்திய மட்டத்தில்புதிய கைத்தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பான தீர்மானங்களை எடுப்பது, அதன் பொறுப்புக்களை ஒப்படைப்பது போன்றபணிகளே இவ்வாணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (உ-8)

## வரும் ஜனவரி முதல் இரட்டை தட்டு பஸ் சேவை நடத்துநர்களாக பெண்கள்

(கொழும்பு)

வெகு விரைவில் பெண்கள் பஸ் நடத்துநர்களாக நியமிக்கவுள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த ஐ.பி. ஐ.எஸ் என்ற நிறுவனம் கொழும்பில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 6 புதிய இரட்டைத் தட்டு பஸ்களைக் கொள்வனவு செய்துள்ளது.

இப் பஸ்களில் கடமையில் ஈடுபடுத்துவதற்காக 20 பெண் நடத்துநர்களை வெகு விரைவில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யவுள்ளதாக மேற்படி நிறுவன அதிகாரி கூறியுள்ளார்.

பிரிட்டன், சிங்கப்பூர், போன்ற நாடுகளில் நடத்துநர்களாக யுவதிகள் பலர் கடமையாற்றுகிறார்கள் என்றும் அவர்களின் சேவை பாராட்டத்தக்க விதமாய் உள்ளது என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

எதிர் வரும் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகவுள்ள இவ் பஸ் சேவை முதலில் கொழும்பு மாநகரசபை பிரதேசத்தில் மாத்திரம் நடைபெறும் என்றும் படிப்படியாக இதன் சேவை நாடு பூராக விஸ்தரிக்கப்படும் பொழுது வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நகர்ப்புறங்களில் இவ் பஸ் சேவை நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது. (உ)

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் விரைவில் முடிவுக்குவரும்?

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் பயங்கரவாதம் மற்றும் அவசரகால தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 135 தமிழ் அரசியல் கைதிகளில் கடந்த ஒக்ரோபர் முதல் இற்றைவரை 34 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நீராகாரம் கூட அருந்தாது தொடர்ந்து 10 நாட்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவின் உறுதி மொழியை அடுத்தே தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இதனை அடுத்து கைதிகளை விடுவிக்கும் முயற்சிகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டது.

இதனடிப்படையில் பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரிலும், ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளின் பேரிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த 34 கைதிகளே இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனாலும், களுத்துறைச் சிறையில் தற்போது உள்ள மீதி 101 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு தொடர்ந்தும் சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதேவேளை, கடந்த வியாழனன்று அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில், பிரதமரின் சமாதான செயலணியின் செயலாளர் பேனார்ட் குணதிலக, மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் கொலிஸ்டர், ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோர் சிறைச்சாலையை மீண்டும் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

### அரசதமிழ்நாடக விழா

(கொழும்பு)

அரச தமிழ் நாடகவிழா எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் கொழும்பில்நடைபெறவுள்ளதுதமிழ் நாடகக்குழு இலங்கைக்கலைக்கழகம் கலாசாரத் திணைக்களம் என்பன இணைந்து இவ்விழாவைநடத்துகின்றன. (உ-8)

### பொறி வெடியில் சிக்கி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குடம்பியன் வரணியை சேர்ந்த திருநாவுக்கரசு அருட்செல்வம் (வயது 27) என்பவர் பொறி வெடியில் சிக்கி படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காட்டிற்கு விறகு வெட்டச் சென்ற சமயம் பன்றிக்காக வைக்கப்பட்டிருந்த பொறி வெடியில் மேற்படி நபர் தனது காலை வைத்தபோது அது வெடித்ததாகத் தெரிகின்றது. (பி-7)

### விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் பாய்ந்ததில்ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் புது றோட்டில் இடம் பெற்றுஇந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த பே.சுஜந்தன் (வயது 20)என்பவரேபடுகாயமடைந்துள்ளார். (உ-7,16)

## இந்திய தூதரகத்தில் ஐயப்ப பக்தர்களுக்கு விசேட கருமபீடம்

(கொழும்பு)

இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக ஐயப்பபக்தர்கள். இந்தியத் தூதுவராலயத்தில் விசா பெறும் நடைமுறைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரின் பணிப்பின் பேரில், அமைச்சுச் செயலாளர் க. பரமேஸ்வரன், மேலதிக செயலாளர் க. பரமலிங்கம் ஆலோசகர் க. பேரின்பநாயகம் ஆகியோர் இந்தியத் தூதுவராலயத்தின் அதிகாரி கே. பி. கோகுலச்சந்திரனை நேரில் கண்டு கலந்துரையாடியமைக்கமைய ஐயப்ப பக்தர்கள் விசா பெறுவதில் உள்ள பல சிரமங்கள் நீக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பல்வேறு காரணங்களுக்காக டிசம்பர் மாதத்தில் இந்தியா செல்லும் பயணிகளின் தொகை மிகவும் அதிகரித்துக் காணப்படுவதால், ஐயப்ப பக்தர்கள் விசா பெறுவதில் காலதாமதத்தைத் தவிர்த்துக்கொள்வதற்காக, உடனடியாகவே தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் வேண்டப்பட்டுள்ளது. (உ)

## தகவல் தொழில் நுட்ப விருத்திக்கு இந்தியா உதவி

(கொழும்பு)

பொது நிர்வாகம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி ஆகியதுறைகளில் தகவல் தொழில் நுட்பத்தின் பாவனையை விருத்தி செய்வதற்கு உதவ இந்தியா இணங்கியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இந்தியாவுக்கான விஜயம்ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்ற அமைச்சரை அந்நாட்டின் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் சந்தித்த போதே இவ்இணக்கம்காணப்பட்டது.

அத்துடன் சுற்றாடல், தொடர்புத்துறை ஆகியன தொடர்பாக உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வதற்கும் இந்சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது.

இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் நிபுணத்துவத்தை பரிமாறிக் கொள்வதற்கு இவ்விரு நாடுகளுக்கும் வசதியாக இருக்கும்எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

### நற்கருணைப்பணிக்கு பொதுநிலையினரும் நியமிக்கப்படுவர்

(ஈச்சமோட்டை)

கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலியின் போதான நற்கருணைப்பணிக்கு பொதுநிலையினரிலிருந்து நற்கருணைப் பணியாளரை நியமிக்குமாறு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பங்குக்குழுக்களுக்கு சுற்றுநிருபமொன்றை விடுத்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் கொள்கைகளுக்கேற்ப குருக்கள், துறவிகள், கன்னியாஸ்திரிகள், தியாக் கோன்களுடன் பொதுநிலையினரையும் இறைபணியில் நெருக்கமாக இணைத்துக்கொள்வதற்காகவும் திருப்பலியின் போதான நேரவிரயத்தை குறைப்பதற்கும் இந் நடைமுறை புகுத்தப்பட்டுள்ளது. (உ-59)

### மர நடுகை

மாவீரர் எழுச்சிநாட்களின் போது யாழ். மாவட்டத்தில் உள்ளசகல சனசமூக நிலையங்களையும் மரநடுகை மற்றும் சிரமதானம் போன்ற ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களில் ஈடுபடுமாறு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் செயலாளர் க. நாகேந்திரம் கேட்டுள்ளார். (9)

## வெள்ளத்துள் சிக்கிய இருவரைக் காணவில்லை

(புத்தளம்)

சிலாபம் மற்றும் புத்தளம் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் இருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையினால் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கின் போதே இவ் இருவரும் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை, இவர்களில் ஒருவர் புத்தளப் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற போது வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டதை சிலர் கண்டுள்ளதாக புத்தளபிரதேச செயலர் ரவி ஜெயலத் தெரிவித்துள்ளார். (உ-10)

## பரந்தன் பாடசாலைகள் பழைய இடத்தில் இயங்கும்

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வேறிடங்களில் இயங்கிவரும் பரந்தன் மகாவித்தியாலயம் மற்றும் பரந்தன் அ. த. க. பாடசாலை ஆகியன அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாக கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலைகளின் காணிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டதும்தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# பஜாஜ்



## பெருநாள் தினங்களில் விசேட கொடுப்பனவுகள்

2002 நவம்பர் 15முதல் – டிசெம்பர் 15 வரை
கொள்வனவுக் கட்டளை சமர்ப்பிக்கப்படும்
ஒவ்வொரு
பஜாஜ் முச்சக்கர வண்டியுடன்

ஒரு சோடி பக்கத்திரைகளும்
சிறில் வெத்தசிங்ஹ என்பவரால் ஓவியம் தீட்டப்பட்டு
மெரீன் விக்கிரமசிங்ஹ என்பவரால் எழுதப்பட்ட
சிறார்களுக்கான புத்தகத் தொகுதியொன்றும்




## இலவசம்!

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த.பெ.1909,75,ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02, தொ.பே:074 - 700600, பக்ஸ்: 074 - 700677, 687175
பிரதேச கிளை அலுவலகங்கள்:174B,கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி, தொ.பே:08-226146 பக்ஸ்: 08-238134
27E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய், தொ.பே:027-50037 பக்ஸ்: 027-50222
382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ.பே:041-28488, பக்ஸ்:041-27488
நீகல் மாவத்தை, அம்பாறை. தொ.பே: 063-22997 பக்ஸ்:063-23662
31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம் தொ.பே:025-25048/9 பக்ஸ் 025-25050
தனசிரிகட்டிடம், இல:195,- பிரதானவீதி, இரத்தினபுரி. தொ.பே/பக்ஸ்:045-22389
இல:116,குருணாக்கல் வீதி, புத்தளம், தொ.பே/பக்ஸ்:032-65527

# பிறவாத பெரும் பேறு தந்தருளும்

# கார்த்திகை சோமவார விரதம்

நித்திய மாயும் ஆனந்த மாயும் ஆங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்தபொருளாயும் இயற்கை அறிவினராயும் உள்ள எம்பெருமானை இடைவிடாது நினைநினைந்து நெக்கு நெக்கு உருகி அனுட்டிக்கின்ற விரதங்களில் சோம வார விரதமும் ஒன்றாகும். இவ்விரதமானது கார்த்திகை மாதத்தில் வருகின்ற திங்கட்கிழமை தோறும் அனுட்டிப்பர்.

கார்த்திகை மாதத் திங்கட்கிழமை அதிகாலைஎழுந்துநித்திய கடன்களைமுடித்துநீராடி அனுட்டான விதிப்படிநீராடி சிவன் கோயில்சென்றுஆலயம் வலம் வந்து வணங்கி முடிந்தளவு ஆலயத் தொண்டு புரியலாம், அன்று பகல் முழுதும் எதுவும்உண்ணாது மாலையில் சிவாலய தரிசனம் முடித்து, மாலையில் அதாவது வீட்டில் தீபம் ஏற்றியபின் உணவுட்கொள்வர். இவ்விரதத்தை ஆகம விதிப்படி அனுட்டிப்பவர்கள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவர். இம்மையிலும் மறுமையிலும் பேரானந்தத் தெவிட்டாத் தேனமுதபோகங்களை அனுபவிப்பர்.

**விரதம் அனுட்டிக்கும் முறை**

சிறப்பாக சுமங்கலிப் பெண்கள், கன்னிப் பெண்கள், விதவைகள், முதியோர் இவ் விரதத்தை ஆசாரசீலர்களாக இருந்து அனுட்டித்தால் விரும்பிய பேறுகளைப் பெறலாம். மன அடக்கமும் திருவைந்தெழுத்துஉச்சாடனமும் அவசியமாகும். மனதை அலைய விட்டும் பொறிவழிப் புலன்களைச்செலுத்தியும் இவ் விரதம் அனுட்டிப்பது 'குளிக்கப் போய்ச் சேறு பூசுவது போல', புண்ணியம் தேடப் போய் பாவம் தேடுதலை ஒக்கும். முக்கரண சுத்தியுடன் எம்பெருமானை இடைவிடாது சிந்தித்துச் சிந்தித்து இவ் விரதம் அனுட்டித்தால் பிறவிகள் தோறும் தொடரும் பாவம் நோய்முதலியன நீங்கி நினைத்தவைகிட்டும்; இதற்றோர் புராணக் கதையுண்டு.

**விரதத்தின் பலன்**

நீர்வளம் நிலவளம்மிக்கதும் சிறந்தபூஞ்சோலைகள்நிறைந்ததுமான நாட்டைச் சித்திர வர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். சித்திரவர்மன்அரச நீதிநூல்களின் படி தன்நாட்டைச் செவ்வனே ஆண்டு வந்தமையால் மக்கள் பசியும் பிணியுமின்றி வசியும் வளனுமாக வாழ மாதம் மும்மாரி பெய்தது.

இத்தகைய அரசனுக்கு அழகே உருவான ஓர் பெண் குழந்தை பிறந்தாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அரசகுமாரி பெண்சீமந்தினி வளர்ந்து மணப்பருவமடைந்தாள். ஆனால் அவள் திருமணம் செய்தவுடனேயே கணவனை இழப்பாளெனச் சோதிடம் கூறியது.

**மாதாஜி**

இச்செய்தியை சீமந்தினி அறிந்திருக்கும்தாள் 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற உறுதியை உடைய அரசி, மன உறுதியுடன், யாக்ஞவல்க்கி முனிவரின் பத்தினியாகிய 'மயித்திரை' என்பவள்தவச்செய்யும்பன்னசாலைக்கு மிகவும்அடக்கஒடுக்கமாகவும், பயபக்தியுடனும் சென்று மயித்திரியைவீழ்ந்து வணங்கித் தன்தலை விதியைக் கூறினாள், ஆசியின்பரிதாபமான நிலைமையைக் கேட்ட மயித்திரி' மகளேஎதற்கும்கவலைப்பட வேண்டாம். எல்லாம்வல்ல முழுப்பொருளாகியசிவபெருமானை உனது இருதயத் தாமரை மலரில் இருத்தி முக்கரண சுத்தியுடன் கார்த்திகை மாதத்தில் வருகின்ற சோமவாரத்தில் வைகறைப் போதில் நீராடி சமய அனுட்டானங்களை ஆகம விதிப்படிமுடித்துஅன்றலர்ந்த புதிய மலர்களைக் கொய்து, உமாமகேசுவரருக்குச் சூட்டிப் பூசனை செய்து, புனிதமான பக்தியுள்ளத்துடன் விரதமிருந்து, அந்தணர்கட்கும் சிவனடியார்க்கும் மகேஸ்வர பூசை செய்து எம்பெருமானை வழிபட்டு வர நீர்நினைத்தகாரியம்எம் பெருமான் அருளால் கைகூடும்'' என்றாள்.

சீமந்தினி 'மயித்திரி' கூறியவாறு சோமவார விரதம் அனுட்டித்து வந்தாள். இவ் விரதத்தின் பயனாக, உமாதேவி சமேத மகேஸ்வரன் அருளால் சீமந்தினிக்கு அழகும் அன்பும் பண்பும் மிக்க சந்திராங்கன் என்ற இளவரசனுக்கும் திருமணம் நிகழ்ந்தது.

தம்பதிகள் இருவரும் மனுதர்ம நீதிநெறி தவறாது இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்தி வந்தனர். ஒருநாள் சந்திராங்கன் தோழர்களுடன் பொழுது போக்கிற்காகப்படகிற் கங்கையில் சென்றான் கங்கை பிரவாகங் கொண்டு பெருக்கெடுத்தது. இதனால் சந்திராங்கனின் படகு கவிழ்ந்தது சந்திராங்கடனும்சென்ற தோழர்கள்கங்கையில்வீழ்ந்து இறந்தனர். சீமந்தினி சோமவார விரதம் சிவாகமமுறைப்படி அனுட்டித்தமையால், சந்திராங்கன் உயிர் தப்பி, கங்கைக் கரையில் மயங்கிக் கிடந்தான்.

அங்கு வந்த நாக கன்னிகைகள் சந்திராங்கனைத் தமது நாகலோகத்திற்குக் கொண்டு தமது நாக அரசன் முன்னிறுத்தினர் சந்திராங்கன் நாக அரசனிடம் தனது பரிதாபக் கதைகளைக் கூறினான். நாக அரசன்பலவித்சேனைகளுடன் சந்திராங்கனை யமுனையாற்றின் வழியாக, அவனுடைய நாட்டிற்கு அனுப்பினான்.

சீமந்தினி கடவுள் தன்னை ஒருபோதும் கைவிடான் என்ற திடநம்பிக்கையுடன்திருவைந்தெழுத் தோதிச் சோமவார விரதம் தொடர்ந்து அனுட்டித்த பயனை அடைந்து மகிழ்ந்தாள்.

## கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில்நேற்று மாணவர்கள் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலும்இல்லம் நேற்றும் சிரமதானம்மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இப்பணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், உயர் தொழில்நுட்ப நிறுவக மாணவர்கள் பெருமளவில் ஈடுபட்டமையை அவதானிக்க முடிந்தது.

கடந்த 6 வருடங்களின்பின்னர் நாளை மறுதினம் குடாநாட்டில்உள்ள மாவீரர்துயிலும் இல்லங்களில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## அரேபிய நாட்டவர் இலங்கையரால் கொலை

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்ற இலங்கையர் அரேபிய நாட்டைச் சேர்ந்த பொறியிலாளர் ஒருவரைக் கொலை செய்துள்ளார்.

இதுபற்றி வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் எல்.கே.ருகுனிகி ஐக்கிய அரபு இராட்சியத்தின் இலங்கைக்கான தூதரகத்திற்கு அறிவித்துள்ளார்

இதேவேளை இக் கொலை தொடர்பான சந்தேக நபரை அரபுநாடு பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

**புலிகள் போகக் கூடாதென்றால்**

## பாராளுமன்றத்துக்கு ஜே. வி. பி வரலாமா? காணி அமைச்சர் கேள்வி

(கொழும்பு)

சமாதான வேலைத்திட்டத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட விடுதலை இயக்கத்தினர் ஒஸ்லோவுக்கு செல்லக் கூடியதாயின் ஜே. வி. பியும் பாராளுமன்றத்திற்கு வரக் கூடாது அன்ரன் பாலசிங்கத்தை ஒஸ்லோ மகாநாட்டிற்கு வரச் செய்தது மிகப் பெரும் வெற்றியாகும் என்று காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ பேச்சுக்களில் புலிகளின் பேச்சாளர் பாலசிங்கம் கலந்து கொள்வதை அனுமதிக்கக்கூடாதென்று எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்த ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசியபோதே ராஜித சேனாரத்ன மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பாலசிங்கம் பங்குபற்றுவதன் மூலம் இருநாடுகள் இருப்பதாக நாம் சர்வதேச சமூகத்திற்கு தெரிவிப்பதாக இருக்கும். அவர் ஒரு தமிழீழத்தின் பிரதிநிதி, பிரதமருடன் மகாநாட்டில், பங்குபற்றுகிறார் என்று பிரேரணைக்கு ஆதரவாக ஜே வி. பி. எம். பி. அனுரா திசாநாயக்க பேசினார்.

ராஜித சேனாரத்ன தொடர்ந்து பேசுகையில், புலிகள் பயங்கரவாதத்தை கைவிட்டு ஜனநாயக வழிக்கு வந்தால் அவர்கள் மீதான தடையை நீக்குவதென்று அமெரிக்கவும் பிரிட்டனும் தெரிவித்திருக்கின்றன. தான் பத்து வருடங்களுக்கு புலிகளிடம் வடக்கு-கிழக்கின் ஆட்சியை ஒப்படைப்பேன் என்று கூறியிருந்த திருமதி குமாரதுங்கவுடன் தகுதிகாண் அரசாங்கம் அமைத்திருந்த காலத்தில் இது பற்றி கூறி அந்த பேச்சை வாபஸ் பெற வைத்திருக்கவில்லைஜே.வி.பியினர். அப்போது இந்த விவகாரங்களை எழுப்பாதது ஏனோ எனக் கேட்டார்.

**அமைதியான என் குடும்பம் மீது**

# ஆத்திரம் கொண்டு குண்டை வீசியவர்கள் யார் என்பதை என்னால் ஊகிக்கமுடியவில்லை

**பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர் மனக்கவலை**

(யாழ்ப்பாணம்)

அமைதியாக வாழ்ந்து வந்த எனது குடும்பத்தின் மீது ஆத்திரம் கொண்டு கைக் குண்டை வீசியவர்கள் யார் என்பது எனக்குப் பெரும் புதிராகவே இருக்கிறது.

இவ்வாறு மனக்கவலை வெளியிட்டார் நேற்று முன்தினம் கொடிகாமம் எருவன் பகுதியில் கைக்குண்டு வீச்சுக்கு இலக்கான குடும்பத்தின் தலைவர் பொ.கந்தசாமி.

இச் சம்பவம் குறித்து அந்தக் குடும்பத் தலைவர்மேலும் விபரிக்கையில்;

விவசாயியான எனக்கோ எனது குடும்பத்திற்கோ இந்த ஊரில் பகைமை ஏதும் கிடையாது.

தவிர, நாம் எந்த அரசியல் கட்சிகளுடனும் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

இந் நிலையில் இவ் விஷமச் செயலை யார் புரிந்திருப்பார்கள் என்பதை என்னால் ஊகிக்க முடியாது உள்ளது.

இரவு 8.30 இருக்கும் நான் வெளி விறாந்தையில் இருந்தேன் எனது மகனும் மகளும் மனைவியும் உள்ளே இருந்தனர் அவ்வேளை மூத்த மகன் வீட்டில் இருக்க வில்லை,

அப்போது வீட்டு ஜன்னலூடாக எறியப்பட்ட கைக்குண்டினால் பெரும் சத்தம் கேட்டதுடன் வெளிச்சமும் தென் பட்டது

இதனைத் தொடர்ந்து உள்ளே ஓடிச் சென்று பார்த்த போதுஎனது மனைவி மற்றும் இருபிள்ளைகளும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர் என்று குறிப்பிட்டார். (உ-7,16)

**கிழக்கு மாகாண முஸ்லிம்களின்**

## பாதுகாப்புக் குழுவின் அறிக்கை இருவாரங்களில் சமர்ப்பிப்பு

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை இன்னும் இருவாரங்களில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

முஸ்லிம்மக்களின் பாதுகாப்புக் கருதி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்தக்குழு சிபார்சு செய்யவுள்ளது.

உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என் யுனைட் தலைமையிலான இக்குழுவில் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா, அதிரடிப் படைத் தளபதி நிமால் குணதிலக ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கான திட்டம் ஒன்றை அதிரடிப்படையினர் ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய, கிழக்குமாகாணத்தில் இருந்து அதிரடிப் படை முகாம்எதுவும் அகற்றப் படமாட்டாது என்பதுடன், அரசாங்க மற்றும் தனியார் கட்டடத்தொகுதிகளில்உள்ள முகாம்கள் அருகிலுள்ள பிரதேசங்களுக்கு மாற்றப்படும்.

கஞ்சிரங்குடா, பாணமை, சாஸ்திரவீதி, 13ஆம்கொலனி ஆகிய வீதிகளில் உள்ள இராணுவ முகாம்கள் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

**நல்லை ஆதீன முதல்வர் நாடு திரும்பினார்**

(யாழ்ப்பாணம்)

லண்டன் சென்றமாதம் 26, 27 ஆம்திகதிகளில் நடைபெற்ற 5 வது அனைத்துலக சைவமாநாட்டில் பங்குபற்றி சிறப்புரையாற்றிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமச்சாரியசுவாமிகள்நேற்று முன்தினம் நல்லைநகர் திரும்பியுள்ளார்.

5 வது அனைத்துலக சைவ மாநாடு முதல்நாள்நிகழ்வு லண்டன் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்திலும் 2 ஆம் நாள்நிகழ்வு லண்டன் சிவன் ஆலயத்திலும் நடைபெற்றது.

இம்மாநாட்டில் உலகின் பலபாகங்களுக்ளிலும் இருந்து சைவஅறிஞர்கள் மடாதிபதிகள் ஆதீனமுதல்வர்கள் பங்குபற்றியிருந்தனர்.

லண்டன் சைவமாநாட்டில் பங்குபற்றியபின்னர் நல்லை முதல்வர் கொழும்புநகரிலும் பல சமயநிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆதீனம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

குறள்

வலம்புரி

## இந்தியாவின் சறுக்கல்

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதன் பின்னர் யுத்த நிறுத்தமும், சமாதான சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. இத்தகையதோர் நல்ல காலநிலையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இன்று 25 ந் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறுகிறது.

இதில் 39 நாடுகள் பங்கேற்கின்றன. எனினும் இக் கூட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானதாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கூட்டத்தில் பங்குபற்றாமல் விடுவதிலேயே இந்தியா மிகவும் அக்கறையாக இருந்தது.

ஆயினும் அமைச்சர்கள் ஜீ.எல். பீரிஸ், மெலிந்த மொறகொட ஆகியோரின் வற்புறுத்தலின் பேரில் இந்தியா பங்குபற்றுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தியாவின் பங்குபறறுதலென்பது பகைகொண்ட உறவினர்களுக்கிடையே நடைபெறும் திருமணத்திற்கு பிள்ளைகளை அனுப்பிவைப்பது போல் இந்திய அரசின் முக்கிய தலைவர்கள் கூட்டத்தில் பங்குபற்றாமல் ஏதோ நாமும் பங்குபற்றினோம் எனபதற்காக அதிகாரமற்ற சில பிரதிநிதிகளை இந்தியா பார்வையாளர்களாக அனுப்பிவைத்துள்ளது. இந்தியாவின் இத்தகைய செயற்பாடு விடுதலைப் புலிகள் மீது அந்நாடு கொண்டுள்ள கடும் போக்கை வெளிடபடுத்தி நிற்கிறது.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதை இந்தியா விரும்புகிறதென இந்திய அரசு சர்வதேச நாடுகளிடம் தெரிவித்து வருகின்ற போதிலும் விடுதலைப் புலிகளின் விடயத்தில் கடும் போக்கைக் கொண்டிருப்பதும், அத்தகைய கடுப்பு நிலை சமாதான முயற்சியைக் குழப்பும் சூழ்நிலையை உருவாக்குமென்பதும் இங்கு நோக்குதற்குரியது.

அரசும, விடுதலைப்புலிகளும் சமாதான முயற்சியை முன்னெடுக்கும் காலகட்டத்தில் அதனை உற்சாகப்படுத்தி இந்துமா சமுத்திரத்தில் அமைதியைப் பேணவேண்டிய இந்தியா குதர்க்கமான முறையில் செயற்படுவது சார்க் நாடுகளுக்கிடையேயான ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிப்பதாக அமையும்.

# வியாழ, சனிபகவான்களின் வக்கிரம்

# நாட்டுக்கு நன்மை பயக்குமா?

சோதிட ஞானி

**ஆ. சண்முகலிங்கம்**

தலைவர், தமிழர், சோதிட ஆராய்ச்சி கழகம்,
யாழ்ப்பாணம்.

அண்டப் பெருவெளியான வான வெளியில் சூரிய மண்டலம் அமைந்திருக்கும் பகுதியில் நவக்கிரகங்களும் நமது பூமியும் சுற்றி வருகின்றன. நமது பூமியைச் சுற்றியுள்ள மேடம் முதலாக மீனம் வரை உள்ள ராசி மண்டலங்களில், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு கேது என்ற ஒன்பது கிரகங்களும் சஞ்சாரஞ் செய்து தத்தமது சுற்றுப் பாதையில் சுற்றிச் சுழன்று வருகின்றன.

இந்தக் கிரகங்களிலிருந்து வெளிப்படுகின்ற கதிரியக்கங்கள் (கதிர் வீச்சு) சூரிய ஒளிக் கதிர்களோடு இணைந்து கலந்து பூமிக்கு வந்து கொண்டிருக்கின்றன. இது ஒரு தொடர்ச்சியான நிகழ்வாகும். இத்தகைய கிரக கதிரியக்கத் தாக்கங்களால் பூமியிலும் மனித வாழ்விலும் மாற்றங்களும் நன்மை, தீமைகளும் தோன்றி வருகின்றன. இப்படியான நன்மை, தீமைகளை சோதிடக்கலை மூலம் நாம் அறிந்து வருகின்றோம்.

நவக்கிரகங்கள் சிலசில போது வக்ர கதி அல்லது பின்நோக்கிய பெயர்ச்சியில் அமையும் காலம். கிரகவக்ரப் பெயர்ச்சி காலம் எனப்படும்.

**கிரகவக்ரப் பெயர்ச்சி அல்லது கிரகபின்னோக்கிய பெயர்ச்சி**

கிரகங்கள் அவற்றின் சுற்றுப் பாதைகளில் சூழன்று வரும் காலங்களில் சில வேளைகளில் பின்னோக்கிச்செல்லும் நிகழ்வுகள் வானத்தில் காலத்துக்குக்காலம் நடந்து வருகின்றன. இதனையே கிரக வக்ரம் அல்லது பின்னோக்கிய பெயர்ச்சி எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த எல்லையற்றபிரபஞ்சத்தில் சூரிய மண்டலத்தில் நாம் வழுகின்றவானவெளிப் பகுதியில் சூரியனைச் சுற்றியுள்ள பரந்த வெளியில் ராகு கேது நீங்கலாக ஏழுகோள்கள் என்று நாம் கூறும் ஏழு கிரகங்களும் அமைந்துள்ளன ராகு, கேதுகிரகங்களுக்குகோள்மண்டல அமைப்பில்லை, அவை சூரியன்சந்திரன் ஆகியவற்றின் சுழற்சியின் போது ஏற்படுகிற நிரந்தரமான நிழல் மண்டலங்களாகும். அதனால் அவை நிழல் கிரகங்கள் அல்லது சாயாக் கிரகங்கள் என அழைக்கப்படுகின்றன.

கிரகங்கள் எல்லாம் சூரியனுடைய தொடர்பில் மின் காந்த சக்தி இணைப்பில் அசைந்து கொண்டிருக்கின்றன. அவை சூரியனிலிருந்து அமைந்துள்ள எல்லை இடங்களை விட்டு குறிப்பிட்ட தொலைவுக்கு அப்பால் செல்வதில்லை. அப்படியாகச் சில கிரகங்கள் தாம் செல்லும் தூரம் வரை சென்று மேலும் போக முடியாமல் திரும்பி அசைந்து வருகின்றன. இந்த நிகழ்ச்சியே கிரக வக்ரம் அல்லது கிரக பின்நோக்கிய பெயர்ச்சி என்று சொல்லப்படுகின்றது. சனி, வியாழன், செவ்வாய் ஆகியவற்றுக்கு மட்டுமே கூடுதலான வக்ரப் பெயர்ச்சி காலம் உள்ளது. புதன், வெள்ளி ஆகிய கோள்கள் சூரியனுக்கு அண்மையில் அமைவதால் அவற்றின் வக்ரப் பெயர்ச்சி காலம் முறையே 03 வாரங்கள், 36 நாட்கள் வரை மாத்திரமே விளங்கும். மற்றக் கிரகங்களான சனி, குரு (வியாழன்) செவ்வாய் ஆகியவை கோடிக்கணக்கான மைல்கள்தொலைவில் வலம் வருவதால் அவை வக்ரமாகும் காலம் 04 மாதங்கள் வரை அமையும். ஆயினும் செவ்வாய்க்கு 04 மாதங்களின் மேலாகவும் இருக்கும். இவை வக்ர கெதியில் சுழலும் காலங்களில் அவற்றின் கதிரியக்கங்கள் குழப்பமும் வேகமும் அதிர்வும் அடைகின்றன. இதன் காரணமாக இவை வக்ரமாகும் சந்தர்ப்பங்களில் பூமியில் அதிக அளவில் தாக்கங்கள் இடம்பெறுகின்றன.

சனி, வியாழன், செவ்வாய் ஆகிய 03 கிரகங்களிலிருந்து சூரியன் அமையும் 05 ஆவது ராசி அல்லது 90 பாகை நிலையிலிருந்து 09 ஆவது ராசி அல்லது 120 ஆவது பாகை வரை சூரியன் செல்லும் காலத்தில் இந்தக் கிரகங்கள் வக்ரப் பெயர்ச்சிக் கதியை அடைகின்றன. இவற்றின் வக்ரப்பெயர்ச்சிக் காலத்தில் தோன்றும் தாக்கங்களால் மனிதர் வாழ்வில் மட்டுமன்றி பூமியின் பல பாகங்களிலும் மாற்றங்கள் நடக்கின்றன.

கிரக வக்ரப்பெயர்ச்சி காலத்தில் நன்மை குறைவாகவும் கெட்ட பலன்களே கூடுதலாகவும் நடந்து வருகின்றன என்பது அனுபவ உண்மையாகும். கிரக வக்ரத்தின் போது ஏற்படும் கிரக யுத்தம் போன்ற அதிர்வு நிலையால் பூமியில் அவை பாதிப்புகளை உண்டுபண்ணுகின்றன.

(தொடரும்)

# சபாநாயகரின் தீர்மானத்தை எதிர்த்து

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு

(கொழும்பு)

நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை அங்கீகரிப்பதற்கான வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பாக சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா எடுத்த தீர்மானத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து பொதுஜனஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன் தினம் சபையை விட்டு வெளிநடப்பு செய்தனர்.

மேற்படி கட்சிகளிடம் இதுகுறித்து எதுவிதகருத்தும் கேட்கப்படாது நீர்ப்பாசன அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை சபாநாயகர் வாக்கெடுப்புக்குவிட்டதனாலேயே உறுப்பினர்கள் சபையைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இதேவேளை இந் நிதிஒதுக்கீடுவேறுபடுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சியினர் கோரியதனாலேயே தான் வாக்கெடுப்புக்கு விட்டதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், தாம் இவ்வாறு கோரவில்லை என மக்கள்விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால்கலபதி மறுத்துள்ளார்.

நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சுக்கான வாக்கெடுப்பில் அதற்கு ஆதரவாக 95வாக்குகள் அளிக்கபபட்டதுடன், எதிராக ஒரு வாக்கும் பதிவாகவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தினசரி தியானம்

### வழியும் முடிவும்

வழியும், முடிவும் உண்மையாக வேறுபாடில்லாதவை. சரியான முடிவை அடைவதற்கு, ஒருவர் தவறான வழியில் செல்லமாட்டார். ஒரு செயலின் நோக்கமானது, அதைச் செய்து முடிக்க மேற்கொள்ளும் முறையின் தன்மையை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. ஒருவர் புறத்தே தீயவராகவும், அகத்தே துறவியாகவும் இருக்கமுடியாது எனவே, உங்களுடைய பழக்கங்களையும், செயல்களையும் தூண்டிவிடும் படியான, மறைந்திருக்கும் உணர்ச்சிகள பற்றி எச்சரிக்கையாக இருங்கள். சரியான பலனைப் பெறுவதற்கு, தவறான வழி, சரி என்று மோசம் போய்விடாதீர்கள்.

சுவாமி சிவானந்தர்.

## இலங்கையில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இனவாதமும் இனபேதமும் தான் 1977 ஒகஸ்ட் 23-ம் திகதி தொடங்கிய கிளர்ச்சியால் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த 2 ஆயிரத்து 300 சிங்களவர்கள் அகதிகளானார்கள்?

இவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டார்களா? வடக்குக் கிழக்கில் முன்னர் 273 பௌத்த விகாரைகள் இருந்தன. யாழ்ப்பாணத்தில் மட்டும் 21 விகாரைகள் இருந்தன; இவற்றிற்கு நடந்தது என்ன? இனிமேல் நடக்கப் போவது என்ன? அவர்கள் வரைந்துள்ள ஈழம் தேசப் படத்தின்படி இலங்கையின் மூன்றில் இரண்டு கடற்கரைப் பிரதேசம் சிங்களவர்களுக்கு இல்லாமல் போகின்றது. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் 74% வீதமான சிங்களவர்களின் நிலைமை என்ன? கிழக்கு சிங்களவர் அல்லாதார் கைக்குப் போனால் சிங்கள நாட்டில் சிங்களவர்களின் எதிர்காலம் என்னாகும்? என்று அடுக்கடுக்காய் வினாத் தொடுத்தார்.

பூமி புத்திர கட்சித் தலைவர் கலாநிதி ஹரிச்சந்திர விஜேதுங்க இந் நிகழ்வில் உரையாற்றுகையில்;

இன்று பௌத்தர்களுக்காக கதைப்பது யார்? பௌத்தர்களுக்காக தீர்மானம் எடுக்க வேண்டியது பௌத்தர்களே அல்லாமல் நோர்வே காரர்கள் அல்ல.

நோர்வே அரசமைப்பின் படி லூதரன் மதத்தை படிப்பித்தல் கட்டாயமாகும். எமது பௌத்த மதத்தை பேணிக்காக்க சட்டம்தேவையில்லை என்பது சரியாகுமா? பௌத்தர்களுக்கு சட்டம் போடவேண்டிய உரிமை பௌத்தர்களுடையது; நோர்வேக்காரரின் இஷ்டத்துக்கு நாம் இழுபட முடியாது என்று குறிப்பிட்டார் (உ-225)

ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில்

# மேற்கிந்திய அணியிடம் இந்திய அணிபடுதோல்வி

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி 135 ஓட்டங்களால் வெற்றிபெற்று கோப்பையை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவர்களின் முடிவில் 6விக்கட்களை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாமுவெஸ் 108 ஓட்டங்களையும், சர்வான் 83 ஓட்டங்களையும் பெற்றனர்.

316 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்து 36.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணியின்சார்பில் யுவராஜ்சிங் 68 ஓட்டங்களைப் பெற்றார். நேற்றைய ஆட்டதின் நாயகனாக சாமுவெல்ஸ்சும் இத் தொடரின் ஆட்ட நாயகனாக கிறிஸ் கெயெயிலும் அறிவிக்கப்பட்டனர்.

7போட்டிகளைக்கொண்ட இப்போட்டித தொடரில் 4போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணியும் 3போட்டிகளில் இந்திய அணியும் வெற்றி பெற்றன. (ந-5)

## கௌத்தூர்மணியைத் தூதனுப்ப கர்நாடக அரசு முடிவு

(கர்நாடகம்)

சந்தனமரக்கடத்தல் மன்னன் வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கருதப்படும் கர்நாடக முன்னாள் முதல்வர் நாகப்பாவை மீட்பதற்கு கொளத்தூர்மணியை தூது அனுப்ப கர்நாடக அரசு நேற்று முடிவு செய்துள்ளது.

சந்தனக்கடத்தல் மன்னன் வீரப்பனின் குரலிலான ஒலி நாடாவின் பிரகாரம் கொளத்தூர்மணியை அனுப்பினால் பேசுவதற்குத்தயாரக இருப்பதாக வீரப்பன் அறிவித்ததை அடுத்து கர்நாடக அரசு நீண்ட ஆலோசனையின் பின் கொளத்தூர் மணியை வீரப்பனிடம் தூது அனுப்ப முடிவு செய்துள்ளது.

கொளத்தூர் மணியைத்தூது அனுப்புவதற்கு வசதியாக சிறையிலுள்ள மணியை பிணையில் விடுவிப்பதற்கான முயற்சியில் கர்நாடகஅரசு ஈடுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நெடுந்தீவு...

பட்டனர் குண்டாந்தடிகள்,கண்ணீர்ப் புகைக் குண்டுகள்,கனரக ஆயுதங்கள் சகிதம் பொலிஸார் மேற் கொண்ட இந் நடவடிக்கை மாணவர்களை விசனத்திற்கு ஆளாக்கியது.

இதேவேளை நெடுந்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட பொது மக்களை அங்கு செல்வதற்கு கடற படையினர் அனுமதித்தனர்.இவ்வாறு நெடுந்தீவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட மக்களிடம் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை கொடுத்தனுப்பியதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந)

## புலிகள்........

உதவி வழங்கும் மாநாட்டில் அமெரிக்கா பங்கு பற்றினாலும் விடுதலைப புலிகள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடை நீக்கம், அவர்கள் நடந்து கொள்கின்ற முறைகளிலும், நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது என்றும் கூறினார். (ம)

## பிரதமர் ரணில்...

வுள்ளதாக் செய்தி ஏஜன்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை இன்று உதவிவழங்கும் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா நோர்வேபிரதமர் செல்போர்க்பிக்கைச் சந்தித்துப் பேசவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## புலிகள் பங்கு..........

அதில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ள மாட்டார்கள் என அச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது

அந்நிலையில் இம்மாநாட்டில் இந்தியாவையும் கலந்து கொள்ளச் செய்வதற்கான இறுதிமுயற்சியைப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா நோர்வேக்கான இந்தியத்தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தியை சந்தித்துப் பேசும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை இந்தியத்தூதரக அதிகாரிகள் இம்மாநாட்டில் பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்திருந்து மாநாட்டினை அவதானிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றய ஒஸ்லோ மாநாட்டு மண்டபத்தைச்சுற்றி பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ம)

## அமைச்சர்.........

அதிபர் பணிமனையில், அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ச.பேரனந்தம், நெடுந்தீவு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், பொது மக்கள் தரப்புப் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளான லயனல் ஜெயசிங்க, குணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் இருந்து முற்றாக வெளியேறும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும் மக்கள் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பொலிஸார் எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாதென்று அமைச்சர் மகேஸ்வரன் பொலிஸாரைக் கேட்டுக் கொண்டார்.

மக்களின் குறைகளையும் அவர்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் நாளை மறுதினம் மீண்டும் அங்கு வருவதாக உறுதி கூறினார்.

இதேவேளை நெடுந்தீவுப் பகுதியில் ஈ.பி.டி.பியினருக்கு எதிரான போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளதாகவும், ஈ.பி.டி.பியினருக்குப் பாதுகாப்பாக பொலிஸார் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸ் பிரிவினர் கடமையில் இருப்பதாகவும்,நெடுந்தீவில் இயல்பு நிலைமை மோசமாகப் பாதிப்படைந்துள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார். (இ)

## மாவீரர் நாள்....

பிரதேசங்கள் எங்கும் மாவீரர்களை சித்திரிக்கும் படங்கள் மற்றும் அலங்கார வளைவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வீதிகள் சந்திகள் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டு ஒலி பெருக்கிகளில் எழுச்சி கீதங்கள் இசைக்கவிடப்பட்டுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்கள் எங்கும் அழகுற புனரமைக்கப்பட்டு தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன இதேவேளை தமிழர்கள் உணர்வு பொங்க அனுஷ்டிக்கும் இம்மாவீரர் நாள் நிகழ்வுகளை இம்முறை குடாநாட்டில் இருக்கும் படையினரும் கண்டுகளிக்கும் சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ)

# தென்மராட்சி மாவீரர்களின் பெற்றோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியிலிருந்து வன்னிப் பகுதி மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு செல்லவிருக்கும் மாவீரரின் பெற்றோர் அனைவரையும், நாளை மறுதினம் காலை 8மணிக்கு முன்பதாக கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்துக்கு வருகை தருமாறு விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர்களை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு வாகனம் மூலம் ஏற்றிச் செல்வதற்காக பின்வரும் இடங்களில் நாளை மறுதினம் பிற்பகல் ஒரு மணியளவில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கைதடி, நாவற்குழி பகுதிகளைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர் கைதடி ப.நோ.கூ.சங்கம்

மட்டுவில் பகுதியிலுள்ளோர் மட்டுவில் மகாவித்தியாலயம்

சரசாலைப்பகுதியிலுள்ளோர் கனகம் புளியடிச்சந்தி

மந்துவில் பகுதியிலுள்ளோர் மந்துவில் சிறிபாரதி வித்தியாலயம்

வரணிப்பகுதியிலுள்ளோர் வரணிச்சந்தையடி

மிருசுவில், மிருசுவில் வடக்கு உசன் பகுதியிலுள்ளோர் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை

கெற்பெலி விடத்தற்பளை பகுதியிலுள்ளோர் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

மேலும் ஏனைய பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் நாளைமறுதினம் பி.பகல் 2.00 மணிக்கு முன்னதாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு வருகை தருமாறும், பளைப் பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் வன்னி செல்வோர் காலை 9.00 மணிக்கு பளை வேம்படி பாடசாலைக்கு வருமாறும், பளையிலிருந்து கொடிகாமம் வரும் பெற்றோர்கள் பிற்பகல் 1.00மணிக்கு பளை வேம்படியில் ஒன்று கூடுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (இ)

## மாவீரர் நாள் நவம்பர் 27

### இம் மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களே

உங்களது குழந்தைகள் தமது உயிருக்கு மேலாகத் தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள், இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உகந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமாகி விட்டார்கள். உங்கள் பிள்ளைகளை தெய்வங்களாக மதிக்கின்றோம். அதேபோல் உங்களையும் தெய்வமாக மதிக்கின்றோம்.

நன்றி.

காரைநகர் வணிகர் கழகம்

## நன்றி நவிலல்

### அமரர் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் (கணபதி கணேசன்)

எமது குலவிளக்கு அமரர் கணபதி கணேசன் அவர்களின் மறைவையொட்டி, எமது ஆறாத்துயரில் பங்கேற்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

சென்னை அஸ்வினி சௌந்தரா.வைத்தியசாலை டாக்டர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும், பேராசிரியர் டாக்டர் முத்து சேதுபதி, பேராசிரியர் டாக்டர் வெங்கடேஷ், டாக்டர் திருமதி சுகுணா மற்றும் அவர்கள் வைத்திய குழுமத்தினருக்கும், **DYALISIS STAFF** இனருக்கும், சிறுநீரகம் வழங்கி பேருதவி புரிந்த திருமதி சசி அவர்கட்கும், அன்னாரின் பூதவுடலை யாழ் எடுத்துவர துரித கதியில் உதவி புரிந்த இலங்கைத்தூதரக அதிகாரிகள், **FLMN CARGO COMPANY** யினர் சென்னை வாழ் நண்பர்கள், உறவினர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் கொழும்பில் சிலாபத்தில்உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியையின் போது வருகை தந்தோர் மலர்வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், இரங்கலுரை நிகழ்த்தியோர், சகல வழிகளிலும் உதவியோர், துயரத்தில் பங்கேற்றோர் அனைவருக்கும், எமது துயரத்தில் பங்குகொண்ட யாழ் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ் கல்வித்திணைக்களம் சார்ந்தோர் அனைவருக்கும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தொலைநகல் மின் அஞ்சல் மூலம் எமக்கு ஆறுதலளித்தோர் அனைவருக்கும், அமரர் பற்றிய செய்திகளை பிரசுரித்து அஞ்சலி செலுத்திய வலம்புரி பத்திரிகை சமூகத்தினருக்கும், மலேஷியா கோலாம்பூரில் நினைவஞ்சலிக் கூட்டம் நடாத்தி அமரரைக் கௌரவித்த செம்பருத்தி பப்ளிக்கேஷனைச் சார்ந்தோர் மலேஷிய நண்பர்கள் அனைவர்க்கும் இலங்கை, இந்திய, மலேஷிய கனடிய லண்டன் எழுத்தாளர் சமூகத்தினருக்கும் நாம் கரங்கூப்பி நன்றி செலுத்துகின்றோம்.

சகோதரர்
க.மயில்வாகனம் (CANADA)
க.லோகநாதன் (தலைமை ஒப்பு நோக்குநர் வலம்புரி)
க.மகாலிங்கம் (வெளிநாடு)
திரு.திருமதி கதிர்வேல்
மருமகன்மார்
க.சசிதரன (LONDON)
க.விஜிதரன் (விளை. உத்தியோகத்தர் நெடுந் தீவு)
க.ஜெகதரன் (பேராதனை பல்கலைக் கழகம்)

கௌரிகணேசலிங்கம் (மனைவி)
பிள்ளைகள்
மைத்துனர்
தி.முருகானந்தன்
(Computer ENGEENER INFORMATION TEEHNOLOGY CHIEF CONSULTANT NORWAY)
தி.பிறைகுமார்
I.T. ADMINISTRHTOR, NETWORK STUDENT NORWAY
திரு. திருமதி.ஸ்ரீதரன் (SURUVEYOR-CHILAW)
திரு.திருமதி.DR.கணேஷ் (INDIA)

70, சிவன் தெற்கு வீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

[C/5295]




## கணனிகளும் கணனி உதிரிப்பாகங்களும் பண்டிகைக்கால விசேட சலுகை

| | |
|---|---|
| Pentium 4 | 57000/-ல் இருந்து |
| 15''Monitor (LG,Samsung, Prolink) | 12500/- |
| CD Writer | 8500/- |
| 128 Ram (Kingston) | 2250/- |
| 256 Ram (Kingston) | 3500/- |
| UPS | 5900/- |
| 4.1 Woofers | 4900/- |
| Inkjet Printer | 7500/- |
| Video (VHS) to CD | 450/- |
| Software CD's | 90/- |
| Re-Writable CD | 200/- |
| Mini CD | 110/- |
| Unbranded CD | 30/- |
| CD Label (3in 1) | 30/- |
| COMPUTER TABLE | 6000/- |

மற்றும் பல உதிரிப்பாகங்கள் குறைந்த விலைகளில்




MICRO PC SYSTEMS
No, 175/3 Kasthuriar Road, Jaffna.
T.P. 077 7308417 WWW.mipaq.com

[C/5296]



## சுயமாகத் தொழில் செய்யுங்கள்

வீட்டில் இருந்து குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து மிகக்குறைந்த முதலீட்டில் இயந்திரம் இல்லாமல் செய்யக் கூடிய நல்ல கைத்தொழில் ஸ்கிரீன் பிரிண்டிங். இந்தத் தொழிலை கொழும்பில் பயின்று இன்று உயர்ந்த நிலையில் தொழில் செய்து வருகின்றனர்.

யாழ். நகரில் உள்ள தமிழ் மக்களுக்கும் இந்தக் கலைத் தொழிலை கற்றுக் கொடுக்க தென்தமிழகத்திலிருந்து R.பரதன் (அச்சுக்கலை நிபுணர்) யாழ். நகருக்கு வருகைதந்துள்ளார். இந்தத் தொழில் பற்றிய முழு விபரம், இதன் பயன் பற்றிய விளக்கம் தேவைப்படுவோர் இலவசமாக நேரில் வந்து சந்தித்து பின்பு பயிற்சியில் சேரலாம். பயிற்சி மூன்று நாள்கள் மட்டுமே. பயிற்சிக்குப் பின்பு தொழில் தொடங்கலாம். சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தொழில் செய்வதன் மூலம்,

பிளாஸ்டிக் பேனா, தகரம், துணிவகைகள், பேனர், பில்புக், நோட்டீஸ், போஸ்ரர், திருமண அழைப்பிதழ், முதலியன பிரிண்டிங் செய்யலாம். இந்த அரிய வாய்ப்பை யாழ். நகரமக்கள் பயன்படுத்திக் கொள்ளவும். பயிற்சியில் வயது வரம்பு தேவையில்லை.



நேரில் தொடர்பு முகவரி:- CAREER COM INSTITUTE
79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 0777 706334

[C/5291]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.